# பாதுகாவலன்

PATHUKAVALAN


தொடர் நிலை

| | | |
|---|---|---|
| 28 | மிருசுவில் | 91 |
| 29 | O. L. R. | 91 |
| 30 | கரம்பொன் | 87 |
| 31 | கிளிநொச்சி | 85 |
| 32 | மாம்புரி புத்தளம் | 82 |
| 33 | றாகலை | 80 |
| 34 | தலைமன்னார் | 80 |
| 35 | தலவாக்கலை | 79 |
| 36 | அடம்பன் | 75 |
| 37 | வட்டக்கச்சி | 75 |
| 38 | ஊர்காவற்றுறை | 74 |
| 39 | அரிப்பு | 70 |
| 40 | நாநாட்டான் | 65 |
| 41 | பதுளை | 60 |
| 42 | தாளையடி | 6[illegible] |


மலர்: 116 இதழ் : 19   01–6–1990   ( ஜுன் 1 — ஜுன் 8 )   இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு   விலை ரூபா 2/=


## திருச்சபைமீது இடறலையும் அவப்பெயரையும் கொண்டுவரும் என்கிறார் தமது அறிக்கை மூலம் மஜுகோரி திருக்காட்சிகளை மறுக்கும் ஆயர்

# யூகோசிலாவியாவின் ஆயரும் குருக்களும் மஜுகோரி காட்சிகளை நிராகரிக்கின்றார்கள்

**1981 ஆம் ஆண்டு முதல் யூகோஸ்லாவியாவிலுள்ள மஜுகோரியில் அன்னைமரியாள் தொடர்ந்து காட்சிகொடுத்து வருவதாக கூறப்பட்டு ஏராளமான மக்கள் அங்கு யாத்திரை மேற்கொண்டு வருகின்றனர். யூகோஸ்லாவியாவின் 42 ஆயர்களும், அன்னை காட்சி கொடுத்ததாகக் கூறப்படும் மஜுகோரி உள்ள மறைவட்டத்தின் நூறு குருக்களும் இவ்விடத்திற்கு அதிகார பூர்வ யாத்திரைகளை மேற்கொள்ள வேண்டாம் எனக் கேட்டுக்கொண்டுள்ளனர்.**

யூகோசிலாவிய ஆயர் பேரருள்திரு. சனிக் மஜுகோரியில் தேவதாயார் காட்சி கொடுத்துக்கொண்டு வருகிறார் என்ற செய்தியை மறுத்துள்ளார்.

மஜுகோரி அமைந்துள்ள மொஸ்டர் டூவோ ஆயர் பாவாவோ சனிக் அவர்கள் தாமும் தமது மறைவட்டத்திலுள்ள நூறு குருக்களும் இக்காட்சிகளை நம்ப மறுப்பதாகக் கூறியுள்ளார்.

உரோமையிலுள்ள பிரான்சிஸ்கன் சபை தலைமையகம் மஜுகோரி காட்சிகளைப் பறைசாற்றிவரும் யூகோஸ்லாவிய பிரான்சிஸ்கன் சபை குருக்களைத் தடை செய்யப்போவதாக அறிவித்துள்ளது.

சர்வதேச ரீதியாக விநியோகம் செய்வதற்காக யூகோஸ்லாவிய ஆயர் தயாரித்துள்ள துண்டுப் பிரசுரங்களில், காட்சிபற்றிய செய்திகள் பொய் என்றும், அவை திருட்டு என்றும், இதனால் திருச்சபை மீது இடறலும், அவப்பெயரும் ஏற்படும் என்றும் கூறியுள்ளார்.

## நூல்களுக்கு வரிவிலக்கு

**யூக்கன், ஏப்ரல். 16**

இந்தோனேசிய ஜனாதிபதி சுகாட்டோ சமயநூல்களுக்கும், பாடநூல்களுக்கும் வரிவிலக்கு அளிக்கப்படுமென அறிவித்துள்ளார். இதனால் மக்கள் குறைந்த விலையில் இந்நூல்களை வாங்கவும், அதனால் தேசிய கல்வித்தரம் உயரவும் வழியேற்படும் என அவர் கருதுகிறார். இஸ்லாமிய, கிறிஸ்தவ, இந்து, பௌத்த சமயநூல்கள் இச்சலுகையைப் பெறுகின்றன.

## பேரவையின் நோக்கு

வரும் ஒக்டோபர் மாதம் இடம்பெறவிருக்கும் உலக ஆயர் பேரவை கடந்தவைகள் மீதான விசாரணையாக இல்லாமல் வருங்காலத்திற்கான திட்டமிடுதலாக இருக்குமென பேராயர் யாஸ்கோன் உரைத்தார். உலக ஆயர்கள் பேரவையின் பொதுச் செயலகர் பேராயர் கோட் உரைக்கையில் ஆழமான விசுவாசத்

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

## மூவர் இந்தியர்

**வத்திக்கான் மே. 23.**

திருப்பீடத்தின் பல் சமய உரையாடல் அவையின் புதிய உறுப்பினர்களாக திருத்தந்தையால் நியமிக்கப்பட்ட 22 பேரில் மூவர் இந்தியர்கள். கிறீஸ்தவர்கள் அல்லாதவர்களுக்கான செயலகம் என்று முன்னர் அழைக்கப்பட்டு வந்த பல் சமய உரையாடல் அவை திருத்தந்தை 6ஆம் சின்னப்பரால் பிற சமயத்தாரோடு நல்லுறவை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டது.

## அரசியலில் ஈடுபாடு

**வெரித்தாஸ் மே 26**

உண்மையான, பயனுள்ள மாற்றங்களின் மூலவேர்களில் மனித மாற்றத்தைக் காண முடியும் என்று கூறிய திருத்தந்தை பனாமா நாட்டு மக்களிடம் அவர்களின் நல் வாழ்விற்காகவும், சமீபகால நிகழ்வுகளுக்காகவும், தான் செபித்து வருவதாகவும் கூறினார். பாதிப்பை உருவாக்குங்கள், ஆனால் அரசியலில் ஈடுபடாதீர்கள் என்கிறார் திருத்தந்தை,

## ஒலிபரப்பு விஸ்தரிப்பு

**யூக்கன், ஏப். 12**

வத்திக்கான் வானொலி இந்திய மொழிகளில் தனது ஒலிபரப்பை விஸ்தரித்துள்ளது. நாள்தோறும் நான்கு மொழிகளில் இரண்டு ஒலி பரப்புகள் நடைபெறுவதாக இயக்குநரான பிதா சேவியர் ராஜன் குறிப்பிட்டுள்ளார். இந்த ஒலிபரப்பு நிகழ்ச்சிகள் மக்களை மனந்திருப்பும் நோக்குடையன அல்ல. மக்களுக்கு அன்பும், அமைதியும், மகிழ்ச்சியும் தருபவை என்றும் அவர் கூறுகிறார்.

## ஆன்மீக ஈடுபாடு

**வெரித்தாஸ் மே. 20**

திருத்தந்தை 2 ஆம் அருள் சின்னப்பர் பிரேசிலின் பேராயர்கள் அரசியல், சமூக விஷயங்களில் மாற்றம் உருவாக்குவதை ஊக்குவித்தார்.

ஆனால் திருச்சபை ஒரு கடுமையான அரசியல் உருவமாக மாற்றுவதற்கு எதிராக எச்சரிக்கையும் செய்தார். விசுவாசிகள் தனியாகவோ

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

## சுதந்திரம் பெறும் திருச்சபைக்கு உதவிகள் தேவை

**வத்திக்கான் மே. 20**

மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பாவிலும், சோவியத் யூனியனிலும் புதிதாக சுதந்திரம் பெற்றுவரும் தலத்திருச்சபைகளுக்கு உதவுவதற்கான வழிகளை முன்வைக்கும் நோக்கில் அமெரிக்க ஐக்கிய நாட்டு ஆயர்களைக் கொண்ட குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இயற்கைப் பேரழிவுகளிலிருந்து மீண்டு வர ஆர்மேனியா, மற்றும் ஏனைய

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

## காவல் துறைக்கு அறிவுரை

**வத்திக்கான். மே. 23.**

தென்னாபிரிக்காவில் அரசியல் தொடர்பான வன்செயல்களைத் தடுப்பதற்கு நேர்மையான முறையைக் கையாள வேண்டுமென்று தென்னாபிரிக்கத் திருச்சபைத் தலைவர்கள் அந்நாட்டுக் காவல் துறைக்கு வேண்டுகோள் விடுத்

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

## ரஷ்யாவுக்கு திருத்தந்தை செய்தி

**வெரித்தாஸ் மே, 20.**

திருத்தந்தையின் சிறப்புத் தூதுவராக ரஷ்யா வந்த அருள்திரு. பிரான்சிஸ்கோ கொலாசோனாவை ரஷ்ய ஜனாதிபதி மைக்கல் கொர்பச்சேவ் சந்தித்தார். அருட்திரு. கொலாசோனா, கொர்பச்சேவிற்குத் திருத்தந்தையிடமிருந்துதான் எடுத்து வந்த செய்தியினை அறிவித்தார். முன்னதாக கொர்பச்சேவ் திருத்தந்தைக்கு எழுதிய மடலின் பதிலே இச்செய்தி என நம்பப்படுகிறது.

வத்திக்கானுக்கும், ரஷ்யாவிற்குமிடையே நல்லுறவு வளர்ந்து வருவது குறித்து ரஷ்ய ஜனாதிபதி திருப்தி தெரிவித்தார். மனித, மற்றும் நாடுகளின் உரிமைகளை மதித்தலே இம்முன்னேற்றத்திற்கு அடித்தளமாக அமைந்தது.

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

## எம்கருத்து

### அறிக்கையிடல்

கத்தோலிக்க விசுவாசிகள் தமது விசுவாசத்தைப் பகிரங்கமாக அறிக்கையிட இன்னுமொரு சந்தர்ப்பம் வருகின்றது.

எதிர்வரும் 17 ஆம் திகதி கிறிஸ்துவின் திரு உடல் திரு இரத்தத்தின் விழா. உயிர்ப்பின் நாற்பதாம் நாளில் இயேசு விண்ணகம் சென்றது, சென்ற ஞாயிற்றுக்கிழமை பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டது. விண்ணேற்ற விழாவைத் தொடர்ந்து வரும் இந்த ஞாயிறன்று பரிசுத்தஆவியின் விழாவும், வருகிற ஞாயிறன்று பரிசுத்த திரித்துவத்தின் விழாவும் கொண்டாடப்படுகின்றது.

உலக முடிவுவரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன் என்று கூறிய கிறிஸ்து, இதை என் நினைவாகச் செய்யுங்கள் என்று கூறி நற்கருணையை ஏற்படுத்தினார். அந்த நற்கருணை நாதருக்குரிய விழாவே திரித்துவத்தின் திருவிழாவைத் தொடர்ந்து வரும் ஞாயிறு தினத்தன்று ஆண்டுதோறும் கொண்டாடப்படுகின்றது.

சர்வதேச நற்கருணை மகாநாடுகள் உலகளாவிய ரீதியிலே ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை கொண்டாடப்படுகிறது. ஆனால் தலத்திருச்சபையில் மறைவட்ட ரீதியாகவும், பங்கு ரீதியாகவும் ஆண்டுக்கொருமுறை பகிரங்க நற்கருணைவிழா கொண்டாடப்பட்டு, கத்தோலிக்கர் தாம் நற்கருணை மீது கொண்டுள்ள விசுவாசத்தையும், பக்தியையும், அன்பையும் வெளிக்காட்ட சந்தர்ப்பம் உருவாக்கப்பட்டு வந்துள்ளது.

மடுத்திருப்பதியிலே அன்னையின் விழாவுக்கு முந்திய நாள் மாலை வழிபாடு, நற்கருணைநாதருக்கு உரிய வழிபாடாக அமைக்கப்பட்டு இருந்த காரணத்தால் இப்போது நாடு முழுவதும், அந்த மரபு பரவி, பங்கு ரீதியாகவும், கோவில் ரீதியாகவும் நற் நற்கருணைநாதருக்குரிய விசேச ஆராதனையும், வணக்கமும் கோவில் திருவிழாவுக்கு முந்திய நாள் மாலை இடம்பெறுவது வழக்கமாகி விட்டது.

தற்கால அனுபவத்தையும், நடைமுறையையும் சீர்தூக்கிப் பார்க்கையிலே ஆலய விழாவுக்கு முந்திய நாள் மாலை வழிபாட்டில் நற்கருணைநாதருக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, திருநாள் தினத்தில் பாதுகாவலராம் புனிதருக்கு சிறப்பிடம் கொடுக்கப்படுவது கண்கூடு.

முதல் நாள் மாலை நற்கருணைநாதரை கொலு ஏற்றிய அதே ஊர்தியிலே பாதுகாவலராம் புனிதரை வைத்து அலங்கரித்து பவனியில் பங்கு கொள்வதைப் பற்றி சிந்திக்குகையில் இறைமகனுக்கு கொடுக்கப்படும் ஆராதனையிலும், புனிதருக்குக் கொடுக்கப்படும் வணக்கம் பாமர மக்களிடையே மேலோங்கி நிற்பது கண்கூடு.

இத்தகைய தவறான வழிமுறையை மக்கள் பின்பற்ற நமது வழிபாட்டு முறைகள் காரணமாக இருந்தால் அவற்றை நாம் காலத்துக்கும், தேவைக்கும் ஏற்ப மாற்றி அமைக்க முன்வர வேண்டும்.

நற்கருணை மீது கத்தோலிக்கர் கொண்டுள்ள விசுவாசம் தனித்துவமானது. நற்கருணையிலே அப்பத்தின் குணங்கள் மறையும் வரை இயேசு பிரசன்னமாக இருக்கிறார் என்பது கத்தோலிக்க விசுவாசிகள் எவரும் மறுக்க முடியாத உண்மை. இந்த விசுவாசத்தின் அடிப்படையிலேயே நற்கருணைப் பேளையிலே எழுந்தருளி இருக்கும் ஆண்டவருக்கு ஆராதனையும், வணக்கமும் செலுத்துகின்றோம்.

இந்த எமது விசுவாசம், அறிக்கையிடப்பட வேண்டும்.. எமது விசுவாசம் பகிரங்கமாக அறிக்கையிடப்பட, நற்கருணைநாதருக்கு திருச்சபையிலுரிய இடமானது வேறு புனிதர்களுக்கும், பாதுகாவலர்களுக்கும் உரியஇடத்தைவிட மேலானது என உணர்த்தப்பட கிறிஸ்துவின் திருஉடல், திருஇரத்தத்தின் விழாவே சிறந்த நாள். எனவே கோவில்கள், பங்குகள், கிராமங்கள் இணைந்து இம்முயற்சிக்குப் புத்தூக்கம் அளிக்க முன் வரவேண்டும்.

## தேனருவி

பரிசுத்த ஆவி விழா (03-06-90)

### தூய ஆவியால் இயக்கப் பெற்றால்

புத்தம் புதிய கார் ஒன்று. ஆனால் ஓட மறுக்கிறது. இயந்திரத்தின் அனைத்து அங்கங்களும் சீராகப் பொருத்தப்பட்டு இருந்தாலும் அது ஓட மறுக்கிறது. காரணம் என்ன வென்றால், எரிபொருள் துளி கூடத் தாங்கியில் இல்லாமல் போனதுதான். எரிபொருளுக்குத் தட்டுப்பாடு என்றால்தான் அதன் முக்கியத்துவம் புரிகிறது. சக்தி இல்லையேல் உற்பத்தியும், உழைப்பும் ஸ்தம்பிதம் அடைந்து தேக்க நிலை உருவாகிறது. ''சிவமில்லையேல் சக்தியில்லை; சக்தி இல்லையேல் சிவமில்லை'' என்று சாற்றும் சைவ சித்தாந்தம் கடவுளுக்குக் கூட இயக்க சக்தி தேவை என்கிறது. ஆவதும், அழிவதும் பெண்ணால் என்று கூறும் அனுபவ மொழியும் ஆண்மகன் இயங்க பெண் சக்தியாக அமைகிறாள் என்கிறது.

பெந்தெகோஸ்தே விழாவில் சீடர்களின் புத்துயிர் அனுபவமும் இதைப் போன்றது. சீராகவும், சிறப்பாகவும் பொருத்தப்பட்ட வாகனம் போல, இயேசு பிரானால் சிறப்புடன் உருவாக்கப்பட்ட சீடர்கள் இயங்குவதற்கு அவருடைய ஆவியின் சக்தி தேவைப்பட்டது. பூட்டிய அறைக்குள் இயங்கவும், இயக்கவும் மறுத்து உறக்க நிலையில் கிடந்த சீடர்கள் துளிர்த்து எழத் தூய ஆவி தேவைப்பட்டார். மூடிய கடவுகளுக்குள் அச்சத்தால் முடங்கிக் கிடந்தார்கள் சீடர்கள். அவர்களுள் பரிசுத்த ஆவியை ஊதுகிறார் இயேசு. ஏன்? அவர்களுடைய கோழைத்தனத்தைச் சுட்டெரித்து துணிவுடன் சுடர்விட்டு, தம் சாட்சிகளாய் எரிய வேண்டும் என்பதற்காக.

பணிக் களத்தில் குதித்து, எல்லைகளைக் கடந்து பார் எங்கும் செல்ல வேண்டும் என்பதற்காக. மன்னித்து மன்னிப்புக் கோரி அனைத்து மக்களையும் இறைவனுடனும், அயலவருடனும் ஒப்புரவு செய்து ஒன்றிப்பைக் காக்க வேண்டும் என்பதற்காக.

இன்று அதி பரிசுத்த ஆவி எம்மிலும், சமூகத்திலும் செயல்பட்டு வருகிறார். ஊக்கமும், சக்தியும் தர முயலுகிறார். ஆற்றல்கள் வழங்குகிறார். உடலில் பல அங்கங்கள் இருப்பினும் ஒரே உடலாக அவை இணைந்து செயல்படுவதுபோல, ஆவியானவரின் செயல்பாடும் ஒரு நோக்கத்தையே தோற்றுவிக்கின்றது. ''ஆற்றல்கள் அவனவனுக்கு அருளப்படுவது பொது நன்மைக்காகவே'' என்று புனித சின்னப்பர் முழங்குகிறார். ஆவியானவரின் சக்தியால் நாமும் திருச்சபையும் இயக்கம் பெற்றால் நாம் திடம் கொள்வோம், தாராளமாகப் பணி புரிவோம். நன்மை செய்வோம். ஒற்றுமையை வளர்ப்போம். மகிழ்ந்திருப்போம். புத்துயிர் பெற்று நாளும் வளருவோம்.

''பரிசுத்த ஆவியே! எழுந்தருளி வாரும். உமது விசுவாசிகளின் இதயங்களை நிரப்பியருளும்''

**சுவாமி ஜீவா போல் (அ.ம.தி.)**

அப். பணி. 2:1–11. எல்லோரும் பரிசுத்த ஆவியால் நிரம்பினர்.
கொரி 12:3–13 ஆற்றல்கள் பொதுநன்மைக்கே.
அரு. 20:19–23 நானும் உங்களை அனுப்புகிறேன்.

### திருத்தந்தையின் அனுதாபச் செய்தி

ரஷ்ய ஓர்த்தடொக்ஸ் கிறிஸ்தவ சபையின் பிதாப்பிதா சீமென் மரணமடைந்ததையொட்டித் தனது ஆழ்ந்த அனுதாபங்களை வெளியிட்டுத்திருத்தந்தை2–ம் அருள் சின்னப்பர் இத்தீவின் பிதாப்பிதா கிளாரெட்க்கு இரங்கல் தந்தி ஒன்றை அனுப்பியுள்ளார். ரஷ்யாவில் கிறிஸ்தவம் அறிவிக்கப்பட்டதன் 1000 ம் ஆண்டுக் கொண்டாட்டங்களைப்பற்றித் தன் இரங்கல் தந்தியில் குறிப்பிட்டுள்ள திருத்தந்தை 1988 ம் வருட இக்கொண்டாட்டங்களின் வழி மக்களை மகிழ்ச்சியில்வாழவைத்த பிதாப்பிதா சீமென் ரஷ்யாவில் கிறிஸ்தவ சபை சமுதாய மற்றும் கலாச்சாரத்தின் புதுப்பிறப்பையும் தன் வாழ்நாளில் கண்டு சென்றுள்ளார். என்று மேலும் உரைத்துள்ளார்.

தற்காலிகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் பிதாப்பிதா கிளாரெட்டுக்கும் ஆயர்களுக்கும், குருக்களுக்கும் விசுவாசிகளுக்கும் தன் ஜெபங்களை வழங்குவதாகவும் திருத்தந்தை தன் செய்தியில் கூறியுள்ளார்.

### 40ஆம் வருட இறந்ததின நினைவுத் திருப்பலி



**அருட் தந்தை**
**நொபேட் பெரேரா O.M.I,**
தோற்றம்:
**6–01–1871**
மறைவு:
**04–6–1950**

'நொபேட் சுவாமி என அழைக்கப்பட்ட குரவர் அவர்கள் 1913ஆம் ஆண்டு தொடக்கம் 1944ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாண மறைவட்டத்தில் பணி புரிந்தார். இவர் அநேகரின் பசியைப்போக்கி, சிறையில் இருந்தோரை ஆதரித்து, ஆறுதல் கொடுத்து, குழந்தைகளைத் தாய் போல் பராமரித்து, கைவிடப்பட்ட நோயாளிகளைக் குணப்படுத்தி மக்களின் ஆன்ம குருவாக விளங்கி 'புனித வின்சென்டி போலோ இவர்' எனக் கூறத்தக்கவராய் விளங்கினார். இவர் செய்த சேவைகளுக்கு நன்றியாக பின்வரும் ஆலயங்களில் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

புனித மரியன்னை பேராலயம் யாழ். 4–06–90 காலை 6–15. புனித அந்தோனியார் ஆலயம், பாஷையூர் 4–06–90. காலை 6–00 மணிக்கு. புனித அடைக்கல நாயகி ஆலயம், யாழ்ப்ப ணம் 4–06–90 காலை 6–00 மணிக்கு. புனித யாகப்பர் ஆலயம், யாழ்ப்பாணம் காலை 5–30 மணிக்கு. புனித யுவானியார் ஆலயம், யாழ்ப்பாணம் காலை 6–00 மணிக்கு.

புனித மரியன்னை ஆலயம் புத்தளம் 4–6–90 காலை 6–15. புனித அன்னம்மாள் ஆலயம் பண்டியந்தாழ்வு 5–6–90 காலை 6–15 மணிக்கு. யாழ் அருள் ஆச்சிரமம் 5–6–90 காலை 6–00 மணிக்கு.

திருப்பலிகளில் பங்குபற்றி அவர் மூலம் இறைவனிடம் எங்கள் சமாதானம் நிலைத்திட வேண்டுவோமாக!

A/125

# பங்குத்தளங்களில்....

## சிலாபத்தில்

''எம் திருத்தந்தையின் அண்மைக்கால வேண்டுதல்களினால் உலகில் ஏற்பட்ட மாற்றங்களினால் எம் விசுவாச வாழ்வு உயர்ந்துள்ளது. கிறிஸ்துவின் அன்பில், நீதியில் புதுயுகம் காண்போம். எமது செபதவ வாழ்வும் முன்மாதிரிகையும் அவசியம்'' இவ்வாறு மகாவந்தனைக்குரிய சிலாப ஆயர் பேரருள்திரு. மார்க்கஸ் பெர்னாண்டோ அவர்கள் இலங்கைக் கத்தோலிக்க ஒன்றியத்தின் பொதுக்கூட்டம் முதன்முதலாக சிலாபத்தில் ''சுத சுன' மண்டபத்தில் வைகாசி மாதம் 12ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு தலைவர் திரு. நியூட்டன் பெர்னாண்டோ அவர்களின் தலைமையில் கூடியபோது, சிறப்புரை வழங்கினார்கள். நாட்டின் 10 மறைவட்டங்களிலிருந்தும் 60க்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் கலந்து கொண்டார்கள். 'கிறிஸ்துவுக்குள் நாம் அனைவரும் ஒன்றே' என்ற விருது வாக்குக்கு ஏற்ப நாம் செயற்பட பொதுநிலையினர் நாம் பலவித குழுக்களாக இருப்பினும், எல்லாக் குழுக்களும் கிறிஸ்துவுக்குள் இணையவும். கிறிஸ்துவ விசுவாசத்தினை வளர்க்கவும் செயற்படவேண்டும், பங்குரீதியாக, மறைவட்ட ரீதியாக கிறிஸ்துவின் 2000 ஆண்டு வருகைக்கு ஆயத்தங்கள் செய்யவேண்டும். எனத்தலைவர்கள் எடுத்துக் கூறினார்கள். கலந்துரையாடலிலும், தீர்மானங்கள் எடுத்தலிலும் ஆயர் அவர்கள் வெகுநேரம் பங்கேற்றுத் தமிழ் மொழியிலும் அறிவுரைகள் வழங்கினார்கள். மதிய உணவின்பின் சிலாப மறைவட்டத்தின் எல்லாப் பங்குகளிலிருந்தும் வந்த பொது நிலையினர் குழுக்களோடு இலங்கைக் கத்தோலிக்க ஒன்றிய உறுப்பினர் கலந்துரையாடி புதிய அனுபவங்களைப் பரிமாறி மகிழ்ந்தார்கள். சிலாப மறைவட்டத்தின் விசுவாச வளர்ச்சியும், பொது நிலையினர் முயற்சிகளும் பெரிதும் பாராட்டுதற்தரியது.

**V. A லெம்பேட்**

★

## தேற்றாத்தீவில்

மட்டக்களப்பு மறை மாவட்டத்தில் தேற்றாத்தீவு என்னும் ஊரிலே அமைந்துள்ள புனித யூதாததேயு ஆலய திருவிழா கடந்த சித்திரை மாதம் 20ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தினமும் மாலை 4 மணிக்கு செபமாலை பிரார்த்தனை நவநாள் திருப்பலி நடைபெற்றன. 28ஆம் திகதி மாலை இறுதி நவநாளில் ஆலய முன்னாள் பங்குத்தந்தை அருட்திரு. டிக்கோனி, அருட்தந்தையர்கள், அருட்சகோதரர்கள், சகோதரிகள், பக்தர்கள் புடைசூழ திவ்விய நற்கருணை நாதரின் பவனி இடம் பெற்றது.

29ஆம் திகதி காலை 7–45 மணிக்கு திருநாட் திருப்பலியை மட்/திருமலை ஆயர் அதிவந்தனைக்குரிய கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் நான்கு குரவர்கள் சேர்ந்து ஒப்புக்கொடுத்தனர் இறுதியாகப் புனிதரின் சொரூபச் சுற்றுப் பிரகாரத்தைத் தொடர்ந்து பங்குத் தந்தை அருட்திரு. கிங்ஸ்லி றொபட் அவர்களால் சொரூப ஆசீர்வாதம் நடைபெற்றது.

அ. செல்வறாஜன்
திரு இருதய ஆலயம்,
கல்முனை

★

## பாலையூற்றில்....

திருகோணமலையின் பிரசித்தி பெற்ற யாத்திரை ஸ்தலமான பாலையூற்று புனித லூர்து அன்னையின் வருடாந்த திருவிழா வைகாசித் திங்கள் 18ஆம் நாள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 27ஆம் நாள் திருநாள் விசேட கூட்டுத் திருப்பலியுடன் நிறைவு பெற்றது.

இவ்வாண்டின் சிறப்பு நிகழ்ச்சியாக மகாஞானஒடுக்கமும், நவநாளும் இடம்பெற்றது. திரளான மக்கள் வழிபாடுகளில் பங்கு கொண்டு அன்னையின் அருள் பெற்றுச் சென்றனர்.

ஜி. அல்பேட்
திருமலை.

★

## சாவில் மலர்ந்த வர்ழ்வு

பங்குனி 30 ஆம் திகதி வலைப்பாடு பங்கில் நடைபெற்ற 'சாவில் மலர்ந்த வாழ்வு' என்னும் கிறிஸ்து நிகழ்ச்சியைப் பார்வையிட்டேன். உலகிலே காணப்படும் எந்தப் பொருளும் மடிவதனால் அது பின் புதிய உயிர் பெற்றெழுகிறது. அது போலவே இறைமகன் கிறிஸ்துவும் எமக்காக இறந்து மீண்டும் உயிர் பெற்று மனுக்குலத்துக்கு வளமான வாழ்வு தேடித்தந்தார். மனிதர்களாகிய நாமும் அப்படி உயிர் பெறமுடியும் என்ற அருமையான கருத்துப் பொதிந்த இந்த நிகழ்ச்சி முற்றிலும் புதுமையானதாகவே தயாரிக்கப்பட்டுள்ளது.

வலைப்பாடு ஆலய வளவில் இயற்கையாகவே அமைந்த மேட்டு நிலப்பகுதியும், அயலில் உள்ள மரம் செடிகளும் உண்மைக்காட்சியைப் பார்ப்பது போலத் தென்பட்டதே இந்த நாடக நிகழ்ச்சியின் வெற்றிக்கு முதற்காரணமாக அமைந்தது. ஒலி. ஒளி, நிகழ்ச்சிக்கு மேலும் மெருகூட்டியது. நடிகர்கள் ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் தங்கள் பாத்திரங்களை உணர்ந்து சிறப்பாகநடித்தார்கள், யேசுநாதர் பாத்திரத்தை ஏற்றவர் மிகவும் அமைதியாக உருக்கமாக நடித்து தனது பொறுப்பை நிறைவேற்றினார். உரையைப்போலவே பாடல்கள் அனைத்தும் நிகழ்ச்சிக்கு உயிரூட்டி அனைவரின் உள்ளத்தையும் ஈர்த்தன. குறிப்பாக யார் நீ இறைவா, அன்று தைலமரக்காவில், பூ முகத்தின் சாந்தி ஒளி, போன்ற பாடல்கள் மறக்க முடியாதவை. பின்னணிப் பாடகர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள், காட்சி தொடரும் முறையில் சில வேளை தடங்கல்கள் மொத்தத்தில் நீண்ட நாட்களுக்குப் பின் சிறந்த ஒரு சமய நிகழ்ச்சியைப் பார்த்துப்பயனடைய உதவியதற்காக வலைப்பாடு பங்குத்தந்தை அவர்கட்கும் கலைஞர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

யோ. தாவீது
வலையன் மடம்

★

## அங்குரார்ப்பணம்

நரக்களி புனித. செபஸ்தியார் ஆலைய இளைஞர் மன்றம் '' நரக்களி விவசாயிகள் கூட்டுறவுச் சங்கம்'' என்னும் சங்கத்தை இளைஞர் தொடர் பகத்தில் மார்ச் 1 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைத்தது.

போஷகர்களாக அருட் தந்தைதி.மொத்தி ஞானப்பிரகாசம் அவர்களும், சமாதான நீதிவான் திரு. B. S. பிள்ளை அவர்களும், கிராமசேவை அலுவலகர் திரு. ஜெயராஜ் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். சங்கத்தலைவராக திரு. A. ஸ்டனிஸ்லாவுஸ் உப; தலைவராக செல்வன் E. ஸ்டாலின் அவர்களும் செயலாளராக M. மரியதாஸ் பொருளாளராக திரு. S. E. ஜெயராஜ் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

அமைப்பாளர் S. E. ஜெயராஜ் அவர்கள் இன்று எமது கிராமிய விவசாயிகளின் ஒற்றுமைக்கும், கூட்டுறவு மனப்பான்மைக்கும், முன்னேற்றத்திற்கும் எமது விவசாயிகள் கூட்டுறவுச் சங்கத்தின் உயிர்த்துடிப்பான செயற்பாடு இன்றியமையாது என்று குறிப்பிட்டார்.

J. E. ஸ்டாலின்
நரக்களி
நுரைச்சோலை, புத்தளம்

## ஆண்டுவிழா

கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி மாணவர்கள் தனிநாயகம் தமிழ்மன்றத்தின் 3வது ஆண்டு விழாவைக் கடந்த, மேமாதம் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொண்டாடினர். இவ்விழாவில் மன்னார் ஆயர். பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தார்கள். அன்று காலை ஆயர் அவர்களின் தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. மாலை 4–30 மணியளவில்

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## தூய ஆவி வந்துவிட்டார்...எனவே!

பிறர் பகையை மறந்திடுவோம்.
பிறர் சினேகம் கொண்டிடுவோம்.
சண்டைகளை மறந்திடுவோம்.
சமாதானம் செய்திடுவோம்.
கவலைகள் மறந்திடுவோம்.
ஞான சந்தோஷத்தில் வாழ்ந்திடுவோம்.

சிறுமைகளை அகற்றிடுவோம்.
பொறுமைதனில் மிளிர்ந்திடுவோம்.
தீய எண்ணங்களை விட்டிடுவோம்.
நல்ல எண்ணமதில் திளைத்திடுவோம்'
அகங்காரங்களை எரித்திடுவோம்.
சாந்த குணமதில் ஒளிர்ந்திடுவோம்.

அவ விசுவாசத்தை விரட்டிடுவோம்.
நிறை விசுவாசத்தை ஏற்றிடுவோம்.
வெறு வாழ்வை நீக்கிடுவோம்.
செப வாழ்வைத் தொடங்கிடுவோம்.
அச்சத்தை நீக்கிடுவோம்.
திடத்தினைப் பெற்றிடுவோம்.

பகைமைகளை உரிந்திடுவோம்.
அன்புதனை அணிந்திடுவோம்.
உலக வாழ்வை வெறுத்திடுவோம்.
ஆன்ம வாழ்வில் நடைபோடுவோம்.
அவ மரியாதைகளை விட்டுவிடுவோம்.
மரியாதையினைக் கொடுத்திடுவோம்.
சிலை வழிபாடுகளை மறந்திடுவோம்.
மூவொரு இறைவனை வாழ்த்திடுவோம்.

**M. M. நிக்ஸன்**
அ. ம. தி. குருமடம்.

## யார் குற்றவாளி ?...

தோளில் ஏறி இருந்து கொண்டே தலையில் குட்டும் நிகழ்ச்சி இன்று அதிகரித்து விட்டது.
தோளில் ஏறவிட்டவன் குற்றவாளியா ?
அன்றேல்.......

அன்பையும் அறத்தையும் அமைதியையும் பற்றி பேசும் நாடுகளே இன்று அணுக்குண்டையும் அழிவு சாதனத்தையும் அதிகரிக்கிறது.
இவற்றைக் கேட்டவன் குற்றவாளியா ?
அன்றேல்.....

ஆண்டவன் சந்நிதியில் அன்பு உடன்படிக்கை செய்த ஆணும் பெண்ணும்
இன்று அவ்வுடன்படிக்கையை ஆண்டவன் முன்விட்டு வாழ்ந்தால்
ஆண்டவன் குற்றவாளியா ?
அன்றேல்.....

மீண்டும் வருவேன் என்று வாக்களித்துச் சென்ற கணவன்
இன்று மீளும் போது Mrsஐ Miss பண்ணுமளவில் திரும்பினால்
வெளியே செல்லவிட்டவள் குற்றவாளியா ?
அன்றேல்......

ஐயிரண்டு மாதம் கருப்பையிலிருந்து அன்னை முகம் காண வெளிவந்த சிசு
இன்று கழிவுக் கூடைக்குள்ளும் அநாதை மடத்திற்கும் அனுப்பப்பட்டால்
வெளிவந்த சிசு குற்றவாளியா ?
அன்றேல் ...

பத்து மாதம் சுமந்து பெற்று பத்தியம் காத்து வளர்த்த பிள்ளை
இன்று தரங்கெட்டவனாக மாறினால்
பெற்றவள் குற்றவாளியா ?
அன்றேல்......

மக்களுக்குச் சேவை செய்வேன் என்று புறப்பட்டவன்
இன்று அம்மக்களையே சுரண்டி வாழ்ந்தால்
மக்கள் குற்றவாளிகளா ?
அன்றேல்.....

அன்று அகதியாய் வந்தவனுக்கு வீட்டில் இடங் கொடுக்க அவன் இன்று வீட்டில் அகப்பட்டதைச் சுருட்டிச் சென்றால்
வீட்டில் இடம் கொடுத்தவன் குற்றவாளியா ?
அன்றேல்......

**அருட்திரு. M. L. மொன்போட்**

ஆண்டவன் ஒருவரைத்தவிர குற்றங் குறைகளே அற்றவரென்று வேறு எவரையும் சொல்வதற்கில்லை. அதே வகையில் இவ்வுலகில் குற்றமே உருவானவன் எனத்தக்கவனும் எவனும் இல்லை.

# உயிர்க்க மறுத்த உணர்வு

குளிர்ந்த இளந்தென்றல் மாறனின் உடலைத் தழுவி விடைபெற்றுச் சென்று கொண்டிருந்தது. அவனது உள்ளத்தில் உறைந்து கிடந்த அந்த இன்ப உணர்வு அவனை மெல்லத் தட்டியெழுப்பியது. அந்தத் தென்றல்தான் மாறனுக்கு இந்த உணர்வை ஞாபகப் படுத்தியிருக்கவேண்டும். இளமைப்பருவத்தின் இனிய நினைவலைகளில் நீந்திக்கொண்டிருக்கும் அவனைப்போன்றவர்கள் அதன் இயல்புகளில் இருந்து தம்மை அன்னியப்படுத்திக் கொள்ள முடியுமா என்ன? இந்த மனித வாழ்வின் ஒவ்வொரு பருவமும் ஒருமுறை மட்டும்தான் கிட்டுகிறது என அவன் சிந்தித்தவாறே தன் சேட்டைப் போட்டுக்கொண்டு முற்றத்திற்கு வருகிறான்.

தன் சைக்கிளை அவசரமாக மிதித்துக் கொண்டு நேரத்தைப் பார்க்கிறான். அப்போது தான் அவனுக்கு நினைவு வந்தது, தான் வெளிக்கிட்ட அவசரத்தில் மணிக்கூட்டைக் கட்ட மறந்து விட்டதை. ஆயினும் மொழியரசியின் ரியூசன் கிளாஸ் முடிந்திருக்கக் கூடாது என அவன் மனம் உள்ளூர நினைத்துக் கொண்டது. அவளுடைய உருவத்தை ஒரு தடவை தன் மனக்கண் முன் நிலைநிறுத்திப் பார்க்கிறான். மொழியரசியின் அழகின் இரகசியம் அவனுக்கு ஓரே மர்மமாகத்தான் இருந்தது. அந்த புன்னகை தவழும் அவள் முகத்தின் ஞாபகம் அவனை இன்னும் விரைவாக சைக்கிளை உழக்கச் செய்தது. என்றுமில்லாதவாறு அவன் பறந்துகொண்டிருக்கும் போது தான் குறுக்கே இடைமறித்தான் கீரன்.

''என்ன மச்சான் இவ்வளவு அவசரமா எங்கபோறா? அவன் சைக்கில் கன்ரிலைப் பிடித்து நிறுத்தியபோது மாறனுக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. ஆனால் கீரனே தொடர்ந்தான். ''ஓ! நீ இப்ப எங்க போறா எண்டு சொல்லாட்டியும் எனக்கு விளங்காதா என்ன? இப்ப நீ போறது அந்த மொழியரசியெண்ட கேளப் பார்க்கத்தானே! நீயும் எத்தன நாளா அவவுக்குப் பின்னால திரியுறா எண்டு எனக்குத் தெரியும் .....'' மாறனுக்கு தூக்கி வாரிப் போட்டது கீரன் தன் நண்பன் என்றாலும் இந்த விசயத்தை மாறன் அவனுக்கு சொல்லவில்லை. இப்போது அவனே எல்லாவற்றையும் கொட்டிவிட்டபோது மாறனுக்கு உள்ளூர மகிழ்ச்சியாகத் தான் இருந்தது. ''என்ன மாறன் கனக்க யோசிக்கிறா, போலகிடக்கு கெதியா உழக்கு ...... ரியூசன் முடியப் போகுது, நானும் உன்னோட வாறன் .'' மாறனும் வேறு வழியின்றி அவனையும் ஏற்றிக் கொண்டு சைக்கிளை மிதிக்கிறான்.

''டே கீரன் நான் அவள கனதரம் பாத்தாலும் இன்னும் ஒருக்காலும் கதைக்கல்ல. அவளின்ர வடிவ மட்டுந்தான் ரசிச்சிக்கிண்டு வாறன். அது தான்ரா இண்டைக்கு எப்படியும் கதைச்சே ஆகணும். '' மாறன் கூறி முடிப்பதற்குள் சைக்கிள் பிரதான வீதியில் உள்ள ரியூசன் சென்ரருக்கு முன் வந்துவிட்டது.

**சிறுகதை**

ரியூசன் முடிந்து விட்டது. மாணவர்கள் எல்லோரும் மிகுந்த ஆரவாரத்தோடு வெளியேறிக் கொண்டிருந்தனர். மாறனின் கண்கள் மொழியரசியைத் தேடிக் கொண்டிருந்தன. தூரத்தில் மொழியரசி தன் சிநேகிதியோடு வந்துகொண்டிருந்தாள். மாறனைக் கண்டதும் தன் நண்பி பக்கம் திரும்பி அவனைச் சுட்டிக்காட்டி, ''பாரடி ஒவ்வொரு நாளும் அந்த ஒரே உடுப்புத்தான். பாவம் வேற இல்லப் போல ......'' அவள் சொல்லி முடிப்பதற்குள் அவள் சிநேகிதி உருண்டு உருண்டு சிரித்தாள்.

※※※※※※※※※※※※

**தமிழ் நேசன்**

※※※※※※※※※※※※

தூரத்தில் தான் அவர்கள் கதைத்துக்கொண்டாலும் அவ்வுரையாடல் தெளிவாக மாறனுக்குக் கேட்டது. அவன் மனத்தில் இரும்பு ஆணி இறங்கியதைப் போன்ற உணர்வு. உடனே சைக்களைத் திருப்பிக் கொண்டு காயப்பட்ட இதயத்தோடு வீடு நோக்கி வருகிறாள். ''இண்டைக்கு அப்பாவைக் கண்டு புது உடுப்புத்தைக் கிறதுக்குக் காசு கேக்கணும். அவ நான் ஏழை எண்டு, என்ன மட்டந்தட்டிப் போட்டா. ஆனா எப்படியும் அவள அடைஞ்சே தீரணும்'' உள்ளத்தில் எரிந்து கொண்டிருந்த உணர்வுச் சுவாலைகளுடன் வீட்டுப் படியில் காலை வைக்கிறான்.

அங்கே மாறனின் ஒரே தங்கை கிழிந்துபோன அவளுடைய சட்டையைத் தைத்துக் கொண்டிருந்தாள். ஏற்கனவே அதில் ஆறு ஏழு தையல்கள் போடப்பட்டிருந்தன. காதில் கூட எதுவும் இல்லாமல் அவள் இருந்த தோற்றம் மாறனுக்கு என்னவோ செய்தது. குசினிப் பக்கம் பார்வையைத் திருப்புகிறான். அம்மா கடைக்குவிற்கக் கொடுப்பதற்காக வேர்க்க விறுவிறுக்க இடியப்பம் அவித்துக்கொண்டிருந்தாள். நெருப்போடு தினமும் நெருங்கிப் பழகுவதாலோ என்னவோ அவள் காய்ந்து மெலிந்து காணப்பட்டாள்.

மாறனைக் கண்ட அவன் தங்கை ''என்ன அண்ணா! வேர்த்துக்களைச்சு வாறா? என்ன இண்டைக்கு முகத்தில் சிரிப்பக் கூடக்காணல்ல ...'' தன் தங்கையின் கரிசனையான கேள்விக்கு பதில் சொல்லும் மனநிலையில் அவன் இப்போது இல்லை. தன் வீட்டின் வறுமை நிலை இப்படியிருக்கும்போது எப்படி அப்பாவிடம் புது உடுப்புக்கு காசு கேட்க முடியும் என்று எண்ணியவனாய் மூலையில் கிடந்த ஈசிசேரில் சாய்ந்து கொண்டான். அவன் எண்ண அலைகள் பேரலையாகஎழுந்து வீசிக்கொண்டிருந்தது.

காலம் உருண்டோடி புதிய ஓர் மாதத்தைப் பிரசவித்தது. அந்த மாதமே மாறன் சவூதிக்குச் செல்ல ஏற்பாடாயிற்று. யாருடைய காலைப்பிடித்தோ என்னவோ அவன் அப்பா அவனுக்கு காசு கடன்வாங்கிக் கொடுத்தார். மாறன் புறப்பட இருந்த நாளன்று கீரனும் வீட்டிற்குவந்து அவனை வழியனுப்பத் தயாராகி நின்றான். மாறன் இப்போது சவூதிக்குப் போவது தன் குடும்பக் கஸ்ரத்தைப் போக்கத்தான் என்றாலும் அதோடு இன்னுமொரு முக்கிய காரணமும் இருந்தது. அதாவது தான் ஏழை என்பதற்காகத் தன்னை நிராகரித்து மட்டந்தட்டிய மொழியரசிக்கு முன் பணம் படைத்த மாறனாகத் தோன்றி அவளை அடைய வேண்டும் என்பதே.

மாறனின் வீடே அன்று சோகத்தின் இருளால் சூழப்பட்டிருந்தது. மாறனின் தங்கை ஆறாத்துயரின் மத்தியில் கண்களிலிருந்து உப்பு நதிகளைப் பிரசவித்துக்கொண்டிருந்தாள். அம்மா தன் பிள்ளை எதுவித தடங்கலும் இன்றிப்போய் வேலையில் சேர்ந்துவிட வேண்டுமெனப் பிரார்த்தித்திக் கொண்டிருந்தாள். இந்தச் சோக நாடகத்தை அமைதியாக அவதானித்துக்கொண்டிருந்த கீரன் அந்த அமைதிச் சூழலை மாற்றியமைக்க நினைத்தவனாக ''இன்னும் முக்கி முக்கி நாலு அல்லது ஐஞ்சு வருசந்தானே அங்கால பறந்தோடிவந்து உன்ரவசதிக்கும், விருப்பத்திக்கும் ஒத்த இடத்தில கலியாணத்தச் செய்றது தானே . இல்லையா மாறன்'' அவனுடைய வழக்கமான இத்தகைய பகிடி இப்போது அந்தக் குடும்பத்திற்கு சிரிப்பை ஏற்படுத்தியதில் ஆச்சரியம் இல்லை. ஆனால் மாறனைப் பொறுத்தவரையில் அது அவனுடைய எதிர்கால வாழ்வுக்கான முன்னுரையாகவே இருந்தது. மாறன் புறப்பட்டு விட்டான். காலம் தன் கடமையைச் செய்து கொண்டிருந்தது. சவூதியில் மாறன் இருந்தாலும் அவன் நினைவுகள் மொழியரசியையே வட்டமிட்ட வண்ணம் இருந்தன. எப்போது தாயகம் திரும்பி அவளைச் சந்திப்பது என்பதே அவன் கனவும், நினைவும் எல்லாம்.

ஐந்து வருடத்திற்கு பின்பு தான் நினைத்த படியே பணத்தை உழைத்துக்கொண்டு நாடு திரும்புகின்றான். வந்ததும் வராததுமாக நண்பன் கீரனைக் கண்டு அவளைச் சந்திப்பதற்கான திட்டத்தைக் கேட்கின்றாள். ''மச்சான் நீ வாறாயெண்டு போனகிழமை அறிவிச்ச உடனேயே அவளப் பற்றிய விபரங்களத் திரட்டத் தொடங்கிற்றன். தற்செயலா ஒருநாள் றோட்டில அவளக் கண்டன். பின்னாலே போனன். அவ வீட்டு நம்பரையும் கண்டு பிடிச்சிட்டன்'' கீரன் கூறியதைக் கேட்ட மாறன் மகிழ்ச்சிக் கூத்தாடினான். ''உன்னைப் போல ஒரு (f) பிறண்ட் கிடைச்சதுக்கு நான் லக்கி தான்ரா. இப்பவே அவவிட்ட இந்தப் பிறசன்டுகளோட போய் அவ முன்னுக்கு நிக்கிறன் ......''.

கீரன் கூறிய குறிப்புகளின் படி மாறன் மொழியரசியின் வீட்டை நெருங்கிவிட்டான். கீரன் கூறிய எல்லா அடையாளங்களும் அப்படியே இருந்தன. மனதில் எழும் சந்தோசத்தை அடக்க முடியாதவனாய் தவித்துக்கொண்டு மிகுந்த ஆசையோடு வீட்டின் வாசற்படியில் கால் வைத்து உள்ளே நுழைகிறான்.

அவள் ............ மொழியரசிதான் ... அவளேதான் ... சந்தேகமே இல்லை வெண்ணிற ஆடை அணிந்தவளாய், வெள்ளை மலரைத் தலையில் சூடி வெள்ளைச் சீலையால் தன் உடலைப் போர்த்தியபடி அவள் அங்கே நிற்கிறாள். மொழியரசியின் ஒரே குழந்தை அவள் கையைப் பிடித்தபடி மாறனை ஆச்சரியக் குறியோடு பார்க்கிறான்.

மாறனுக்கு அந்த வீடே சுழன்றுகொண்டிருந்தது. அவன் ஆசையோடு வாங்கி வந்த பரிசுப் பொருட்கள் எல்லாம் அவனை அறியாமலே அவன் கையைவிட்டு வழுகிக் கீழே விழுந்துகொண்டிருந்தன. சுக்கு நூறாக உடைக்கப்பட்ட அவன் உணர்வு உயிர்க்க மறுத்துவிட்டது.

(யாவும் கற்பனை)

# தமிழுக்கொரு தாவீது

'தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா' என்ற பாரதியின் பாவுக்கு ஒப்ப தமிழின் அருமை பெருமைகளையெல்லாம்உலகுக்கு எடுத்தியம்பி உழைத்த கத்தோலிக்க துறவியாகிய தாவீது அடிகளார் இவ்வுலகை விட்டு மறைந்து ஒன்பது ஆண்டுகள் ஆனிமாதம் 2ஆம் திகதியுடன் நிறைவுறுகின்றது.

இவர் வடமராட்சிப்பகுதியில் பருத்தித்துறையில் தும்பளைக் கிராமத்திலே 1907 ம் ஆண்டு யூன் மாதம் 28-ந் தேதி தமிழ்த் தாயின் மடியில் ஓர் தமிழ் மகனாக மலர்ந்தார். பெற்றோர் அவருக்கு இட்ட பெயர் ஹயசிந்து சிங்கராயர் டேவிட் ஆகும். தமிழ் மீது அவர் கொண்ட தனிப்பற்று தாவீது என அவர் நாமம் மாறக்காரணமானது. எனவே தான் அவர் எழுதிய நூல்களில் எல்லாம் தாவீது என்றே தனது பெயரை எழுதத் தொடங்கினார்.

இளமைப் பராயம் முதல் கல்வியைக் கசடக்கற்று வகுப்பிலேயே மிகச்சிறந்த மாணவனாக விளங்கிய இவரை தன்னலமற்ற ஓர் துறவற சேவையாளனாக ஆக்கவேண்டும் என இவரின் தந்தையார் தாவீதுப்பிள்ளை, ஆவல் கொண்டார். தந்தையின் விருப்பமும், இறைவனின் அழைத்தலும் ஒன்றிணைய குருத்துவ வாழ்வுக்குத் தன்னை அர்ப்பணித்தார். ஆரம்பக்கல்வியை யாழ் சம்பத்திரிசியார் கல்லூரியில் கற்றவர் கொழும்புக் குருமடத்தில் குருத்துவக் கல்வியைக் குறைவு இன்றி முடித்து பணிவாழ்வைத் தொடங்கினார்.

கல்விக்கு முடிவேயில்லை என்ற கருத்துடன் அவரின் கல்வி தொடர்ந்தது. லண்டன் பல்கலைக் கழகத்தில் முதற் பிரிவில் முதுகலைமானிப் பட்டத்துடன் பதக்கமும் பெற்றார். இந்திய ஜேர்மன் பல்கலைக் கழகங்களில் தமது அறிவுத் திறமையினால் அங்குள்ள பேரறிஞர்களையே வியப்பில் ஆழ்த்தினார் (தொடரும்)

**மேரி றஞ்சிலி மரியாப்பிள்ளை**
**தும்பளை**

## நற்சிந்தனை

பலி என்ற வகையிலும் சரி, திருவருட்சாதனம் என்ற வகையிலும் சரி, நற்கருணையைப் பற்றி விசுவாசிகள் தகுந்த அறிவுபெற்று, அதைத் தமது வாழ்வின் மையமாகக்கொள்ள வேண்டும்.

## நான் ஒழிக!...

நான் என்ற மமதை
நம் நாட்டை நாடியது.
நம் நாட்டின் அழிவிற்கு
நாம் செய்த தவறு இது.
நான் என்ற முடிவு இது.

நான் ஒழிய, நாம் என்க
நான் பெற்ற பெருவாழ்வை
நாம் பகிர்ந்து வாழ்ந்திட
நம் நாடு நாளெல்லாம்
நலத்துடன் வளர்ந்திடுமே!

**தி. லக்ஸ்மன்,**
யாழ். புனித மாட்டீனார் குருமடம்.

## முழுமையை நோக்கி ......




இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு உயிரினமும் தனக்கெனச்சில பண்புகளைக் கொண்டுள்ளன. இவ்வகையில் மனிதன் ஏனைய படைப்புக்களை விடத்தனக்கென்று சில உயர்ந்த பண்புகளைக் கொண்டுள்ளான். இதிலும், சிறப்பாக ஒருவரிலிருந்து ஒருவர் வேறுபட்டுக் காணப்படுகின்றனர். ஒவ்வொருவனுக்கும் தனித்துவம் உண்டு. ஒருவனுக்கு இருக்கும் தனித்துவம் இன்னொருவனுக்கு இல்லாது இருக்கலாம். இங்குதான் தனிப்போக்கிற்கும், தனித்துவத்திற்கும் இடையிலான முரண்பாட்டைக் கவனிக்க வேண்டியுள்ளோம்.

தனித்துவம் என்பது ஒருவன் தான் செய்வது, சொல்வது தான் சரி, என்று விடாப்பிடியாக நிற்பதைக்குறிக்கும். சுருங்கக்கூறின் தான்பிடித்த முயலுக்கு மூன்றுகால் எனப்பிடிவாதமாய் நிற்பதாகும்.

ஒவ்வொரு மனிதனும் தனது ஆற்றலுக்கேற்ற தன்மையுடன் வாழ்கின்றான். அப்படித்தான் வாழவும் வேண்டும். அதைவிடுத்து, இன்னொருவனை உதாரணமாகக் கொண்டு அதாவது தன் நண்பனைப் போல அல்லது அயலவனைப் போல வாழ முயலும் போதே பிரச்சினைகள் உருவெடுக்கின்றன. நாம் எமது நிறைகளுடன் எமது குறைகளையும்; எமது பலங்களுடன் எமது பலவீனங்களையும் சேர்த்து முழுமையை நோக்கிச் செல்ல வேண்டும்.

அன்புக்குழந்தை, முருங்கன்

## குருசுமுத்தண்ணையின் கிசு கிசு-66

**குருசுமுத்தண்ணை:-** திருவிழாக்காலம் வந்தா இனி ஒரே கொண்டாட்டமாய்த்தான் இருக்கப்போகுது போல அண்ணை?

**ன்னம்:-** அதை நினைச்சாத்தான் கலக்கமாய் இருக்கண்ணை.

**குருசு:-** அதேனடி பிள்ளை அன்னம் கலங்கிறாய்?

**அன்னம்:-** திருவிழா வந்தாத்தானே கோஷ்டியள், சாதியள், பிரிவினையள் வந்திடுது?

**குருசு:-** திருவிழா எண்டா ஊர்கூடி செய்யேக்க அதில ஏன் இதுகள் வருது?

**அன்னம்:-** மைக்கில செபம் படிக்கிறதாரு, கூடுதூக்கிறதாரு, கொடிபிடிக்கிறதாரு, என படத்துக்குப் போஸ் குடுக்க எண்டு திருவிழாவில மட்டும் தங்கட கோயில் எண்டு பக்தி காட்டிறமாதிரி பாசாங்கு செய்து ஊரைக் குளப்பிற கூட்டத்தாலதானே கலக்கமா இருக்கு அண்ணை.

**குருசு** அப்ப இப்பவும் முன்வரிசைக்கு முண்டியடிக்கிற நடிகவேளுகளால திருவிழா எண்டதும் கலக்கம்தான் போல.

## இளைஞர்களே!

★ அனைத்தையும் திறந்த கண் கொண்டு நோக்குங்கள்.
★ உங்கள் உடன் பிறந்தோர் கோரிக்கைகளுக்குச் செவி சாயுங்கள்.
★ துள்ளும், ஆற்றலையும், துடிப்புணர்வுகளையும் பிறர் பணியிற் செலவிடுங்கள்.
★ தன்னலத்தை வளர்க்கும் யாவற்றையும் எதிர்த்துப் போராடுங்கள்.
★ தூய்மை, நேர்மை, மதிப்பு, பெருந்தன்மை என்பவை உங்கள் அணிகலன்களாய்த் திகழட்டும்.
★ வெறுப்புணர்வுகளுக்கும், வன்முறைகளுக்கும் இடம் கொடாதீர்கள்.

## முத்தாரம்

சிக்கனமாயிரு — கருமியாயிராதே.
அன்பாயிரு — அடிமையாயிராதே.
இரக்கப்படு — ஏமாந்து போகாதே.
கொடையாளியாயிரு — ஓட்டாண்டியாகாதே.
வீரனாயிரு — அட்டூழியம் செய்யாதே.
பற்றற்றிரு — காட்டுக்குப் போய்விடாதே.

## சமுதாயம் தேடும் சமத்துவம்

இன்றைய சமுதாயமானது நீதியின்றி, அன்பின்றி, சகோதரத்துவமின்றி, சமத்துவமின்றிப் புரிந்துணர்வின்றிக் காணப்படுகிறது. மனிதன் மனிதனை மதிப்பதில்லை. மனிதனது ஆசைகள் கனவுகள் உதறித்தள்ளப்படுகிறது. சாதிப்பாகுபாடு, சமயப்பாகுபாடு, சீதனக் கொடுமை, இனப்போராட்டம் போன்றன தலைதூக்கி இன்று மனிதர்களிடையே தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது. எங்கே நீதி, எங்கே நிம்மதி அங்கே எனக்கோர் இடம் வேண்டும்'' என்று ஒரு கவிஞன் பாடியிருக்கிறான். அந்த நிம்மதிஎங்குமே இல்லை.

இன்று ஒவ்வொரு கிராமங்கள் தோறும் சாதிப்பாகுபாடு காணப்படுகிறது. அத்தோடு சமயப்பாகுபாடு மிகவும் பாரதூரமாகக் காணப்படுகிறது. ''சாதி மத பேதம் இனி இல்லை. நாம் சார்ந்திருக்கும் கழகத்தின் கொள்கை, இது எமது தமிழ்ச்சகோதரர்களின் கொள்கை, ஆனால் இக் கொள்கை எமது சமுதாயத்தில் காண்பது அரிது. நான் உயர்ந்தசாதி, நீ தாழ்ந்த சாதி என்றும் நான் பணக்காரன் நீ ஏழை என்றும் நீங்கள் எங்கள் கோயிலுக்கு வரக்கூடாது. நாங்கள் உங்களைவிட உயர்ந்த சமயம் என்றும் எத்தனை வகையான பாகுபாடு.

அதுமட்டுமா? இன்று சீதனக் கொடுமையானது ஆண்கள் வர்க்கத்தாரின் ஓர் அணிகலமாக பெண்களை வைத்து ஆட்டிப்படைக்கின்றது. ஒரு ஆணும், பெண்ணும் விரும்பி சீதனம் வேண்டாம் என்று மணமுடித்தாலும் முடித்தபின் ''நீ என்ன சீதனம் கொண்டு வந்தாயா? கொண்டுவா'' என்று தாய்வீட்டிற்குத் திரத்தி விடுவர். பணம் என்ற பேயினால் பித்துப்பிடித்து அலையும் சில ஆண்கள், பெண்களுக்கு சமத்துவம் கொடுப்பதே இல்லை, அத்தோடு பெண்கள் வேலைக்குப் போகக் கூடாது அடுப்பு ஊதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு? அகப்பை பிடிக்கும் கைக்குப் பேனா எதற்கு என்று கேள்விக் கணைகள் தொடுக்கிறார்கள்.

இன்னும் இன்று இனப்போராட்டம் பாரதூரமான சமத்துவமின்மையை எடுத்துக்காட்டுகிறது சிங்களவர், தமிழர் என்ற பாகுபாடு கடந்தகாலங்களில் தலைதூக்கி இன அழிப்பிற்குக் காரணமாக அமைந்துள்ளது.

இப்பிரச்சினைகளுக்கு முடிவேஇல்லையா சமுதாயம் தேடும் சமத்துவம் விரைவில் வராதா? என்று இன்றைய சமுதாயம் ஏங்கி நிற்கிறது. மக்களிடையே நிலவும் சாதி சமயப் பாகுபாடு அழியும் போது சீதனக்கொடுமை ஒழியும் போது இனப்பிரச்சினை தீரும்போது சமத்துவம் தலைதூக்கும் என்பது ஐயமில்லை. சமுதாயமே! நீ தேடும் சமத்துவம் உன்னிடமே உண்டு. சமுதாயத்தில் வாழும் ஒவ்வொரு

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)




### உளச்சார்பு அம்சங்கள்

உடற்கூறு சம்பந்தமானவைகளைவிட மனோதத்துவ அடிப்படையிலான கணவன் மனைவிக்கிடையிலான செயற்பாடுகளே முக்கியமானவையாகும், பால் சம்பந்தப்பட்ட அனுபவங்கள் ஆணுக்கும், பெண்ணுக்கும் ஒரேவிதமாக அமைவதில்லை— ஆணைப் பொறுத்தவரை அவனது பாலுணர்வுத் தூண்டுதல்கள் பலமிக்கவை. பாலுணர்வு அவனது பாலுறுப்புகளில் துரிதமாக எழுப்பப்படுவதாலும், அவை விரைவாக செயற்படுவதாலும் அவ்வுணர்வு ஒரு முனைப் படுத்தப்பட்டு பாலுறுப்புகளில் கூர்ப்புக் கொண்டிருக்கும். பெண்ணைப் பொறுத்தவரை பல கோணங்களில் பாலுறவு அவளை உறுத்துவதால் அன்பு, பாதுகாப்பு, புதுமைவிருப்பு, பரபரப்பு என்னும் உணர்வலைகளுடன் சம்பந்தப்பட்டிருப்பதால் மெதுவாகவே அது செயற்படத் தொடங்கி உடலில் பரவி அவ்வுணர்ச்சிகள் சில உறுப்புகளில் முளைத்து நிற்கும். தாமதமாகவே அவள் பாலுறவில் உணர்ச்சிவயப்படுவாள்.

உண்மையில் கணவன்தான் மனைவிக்கு இணக்கமான முறையில் இதமாக நடந்து பரிவோடும், பக்குவமாகவும் சிறிது சிறிதாக அவளது பாலுணர்வைத் தூண்டவேண்டும்; பாலுணர்ச்சியை எழுப்ப வேண்டும்; மெதுவாக அவளது உடலை உறவுக்கு தயார்படுத்தவேண்டும். கணவன் எவ்வாறு மனைவியைக் கையாளுகிறான் என்பதைப் பொறுத்தே அவள் உறவுக்கு இணங்குவதென்பது தங்கியுள்ளது.

சரியான முறையிலும், உளரீதியாகவும் கணவனே தன்மனைவியை வசப்படுத்திப் பக்குவப்படுத்த வேண்டும். காதல் செய்வது அல்லது காதல்லீலை என்பது ஒரு கலையேயன்றி, அது ஒரு தொழில் நுணுக்கமோ, திறமையோ அல்ல. உடலுறவின் உச்சக்கட்டத்தை அடைந்த பின்னர், கணவன் தனது மனைவியுடன் நெருக்கமான அன்புறவில் நீடித்திருக்கவேண்டும். மனைவி உடலுறவினால் ஏற்பட்ட கிளர்ச்சி அல்லது உத்வேகத்திலிருந்து விடுபட்டு சாதாரண நிலைக்கு வரும்வரை நெருக்கமான அந்த உறவுநிலையில் கணவனும் நீடித்திருந்து அவளைத் திருப்திப்படுத்தவேண்டும். ஏனெனில், மெது மெதுவாகவே பெண் உணர்ச்சிவயப்படுவதுபோல், மெது மெதுவாகவே அவ்வுணர்வலைகளிலிருந்து அவள் விடுபடுகிறாள் என்பதை ஆடவன் கருத்திற்கொள்ள வேண்டும்.

உடல் உறவின்போது செயலற்று வெறுமனே இருப்பதை விடுத்து ஈடுபாடுகொண்டு தன்னுடன் ஒத்துழைக்க வேண்டுமென்றே ஒரு கணவன் விரும்புகிறான், எதிர்பார்க்கிறான் என்பதை மனைவி புரிந்துகொள்ளவேண்டும். இருவரும் தத்தம் உணர்ச்சிகளைப் பரஸ்பரம் வெளிக்காட்டினால்தான், தாம் விரும்பும் அளவுக்கு, எதிர்பார்க்கும் தாம்பத்திய உறவின் உணர்ச்சி பூர்வமான இன்பத்தை நுகர முடியும்— அனுபவிக்கமுடியும்.

### முதலிரவும் கன்னித்தன்மையும்

எமது சமூக அமைப்பின்படி பெரும்பாலான மணப்பெண்கள் கன்னிகழியாதவர்களாகவே இருப்பதால் முதலிரவன்று பால் சம்பந்தப்பட்ட முதல் அனுபவத்தைச் சந்திக்கும்போது ஒரு பய உணர்வை எதிர்கொள்ளுகிறார்கள். மிகவும் உணர்ச்சி பூர்வமான இவ்விடயத்தில் விசேடமாக கணவன் அதிக கவனமாக நடந்துகொள்ளவேண்டும். மனைவியின் மனநிலையை நன்கு புரிந்து கொள்ளாமல் அவசரப்பட்டு அவளை அணுகாமலும், அவளைப் புண்படுத்தாமலும் பார்த்துக் கொள்ளவேண்டும். ஓரிரு முதல் முயற்சிகளிலேயே உடலுறவில் பூரண திருப்தி கண்டுவிடலாமென்று தம்பதிகள் இருவருமே எதிர்பார்க்கக்கூடாது. அனுபவவாயிலாகவும், பரஸ்பர புரிந்துணர்வினாலும், கூடிய சகிப்புத்தன்மையினாலுமே இந்த நிறைவு மெது மெதுவாக— படிப்படியாக ஏற்படவேண்டும். விளங்கிக்கொள்ள முடியாத சந்தேகங்கள் அல்லது பிரச்சினைகள் ஏற்படும்போது தாமதமின்றி ஒரு வைத்தியரை அல்லது திருமண ஆலோசகரை அணுகி அவர்களின் ஆலோசனையைப் பெறுவது அவசியமாகும்.

# அருள்வாக்கு அறிவோம்

## நற்செய்திக்கோர் பின்னணி — 13

**மாற்கு நற்செய்தியின் நடையும் – நயமும்**

அன்புடன் வாசகர்களே! மற்ற நற்செய்தி நூல்களைப் படித்து விட்டு, மாற்கு நற்செய்தியை நாம் வாசிக்கும் போது ஏதோ சிறுவர்களுக்கென அமைந்த நூலைப் படிப்பது போன்ற எண்ணம் எழும்–அழகான நடையில் அமைந்திருக்கும் மற்ற நற்செய்திநூல்கள் அந்தந்த ஆசிரியர்களின் எழுத்தாற்றலை நன்கு வெளிப்படுத்துகின்றன. மாறாக மாற்குநற்செய்திநூலில் தேர்ச்சியான, திறமைமிக்க நடையினைக் காணமுடியாது, இவருடைய தாழ்மொழிகிரேக்கமில்லையானாலும், தனது நூலைக்கிரேக்கத்தில் எழுதுகின்றார். அதனால் சொல் நயம் குறைந்தும, இலக்கண வளம் மறைந்தும் காணப்படுகின்றது. பலசந்தர்ப்பங்களில் நமதாண்டவர் பேசிய அரமேயிக் வார்த்தைகளையே அளிக்கின்றார். உ+ம் தலித்தாகுமி (5:41) எப்பேத்தா (7:34) அப்பாதந்தாய் (14.36) உடனே, அப்பொழுது போன்றவார்த்தைகளைப் பலமுறை பயன்படுத்துகின்றார். வரலாறு எழுதும் பாணியைப்பல இடங்களில் கையாளுகின்றார். இருப்பினும் மாற்குவிற்கே உரிய பலசிறப்பு அம்சங்கள் உண்டு. இவருடைய நற்செய்தி நூல்தான் கிறிஸ்துவின் வாழ்வைப்பற்றி அறிந்து கொள்வதற்கு நமக்குக் கிடைத்த முதல் ஆதாரம். எளிய நடையில் எழுதப்பெற்றதெனினும் அவரது நூலில் விறுவிறுப்பு உண்டு. தமக்குக்கிடைத்த மூலநூலை தமது திறமைக் கேற்பத்திருத்தி அமைத்திருக்கலாம். அப்படிஎழுதாமல், எளிய இனிய முறையில் எழுதியதால் அந்நிகழ்ச்சிகளோடு நம்மையே இணைத்துப் பார்க்கும் மனநிலை நமக்கு உண்டாகின்றது.

கிறிஸ்துவின் மனநிலையையும், அவரைப்பற்றியறிந்த மக்களின் மனநிலையையும் மனதில் பதியுமாறு எழுதுகிறார். கிறிஸ்துவின் செயல்களினால் மக்கள் அடைந்த வியப்பையும், திகிலையும் பல இடங்களில் கூறுகின்றார்,(1: 22, 27) சீடர்களே அவரைக்கண்டு வியப்படைந்ததாகக் கூறுகின்றார். (4: 4, 6:51; 10: 24, 26) மேலும் இயேசுவின் போக்கையும், மனநிலையையும் (3:5) உணர்ச்சிகளையும் இவ்வளவு தெளிவாக எவரும் எழுதியதில்லை. (உ+ம் 6: 34; 6: 6; 7: 34, 11: 12) சிறு, சிறு நிகழ்ச்சிகளைக் கூடவிடாமல் துல்லியமாகத் தருகின்றார். நேரில் கண்டவர்போல தெளிவாக எழுதுகின்றார். உ+ம் இயேசு ஐயாயிரம் மக்களுக்கு உணவளித்தபோது அவர்கள் நூறு நூறாகவும், ஐம்பது ஐம்பதாகவும், கும்பல்கும்பலாகவும் அமர்ந்தனர் என்று மாற்கு மட்டுமே எழுதுகின்றார். (6: 40) இதனால்தான் மறைநூல் அறிஞர்களிடையே மாற்கு நற்செய்தி நூல் சிறப்பிடத்தைப் பெற்றுள்ளது.

எஸ். அந்தோனிப்பிள்ளை

**அறிந்துகொள்ளுங்கள் (108)**

## வரலாற்று அரசியல் பின்னணி

**ஆளுநர்கள்:**

ஆர்க்கலாவுஸ் கி. பி. 6 ஆம் ஆண்டு பதவியிழந்து நாடு கடத்தப்பட்டபின் யூதேயா சமாரியா பகுதிகளுக்கு ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர். ஆர்கலாவுசுக்கு எதிராக உரோமை சென்று முறையிட்ட யூதர்கள் "தங்களுக்கு ஏரோது பரம்பரையைத்தவிர வேறு யாரையாவது ஆளநியமிக்கும் படி" கேட்டார்கள். இதன் விளைவு சீரியாவின் அரசப்பிரதிநிதியின் கீழ் ஒரு ஆளுநன் நியமிக்கப்பட்டான். சீரியாவின் அரசப்பிரதிநிதி குவிரினஸ் யூதேயாவின் முதல் ஆளுநனாக போப்போனியசை நியமித்தான். ஆளுனன் செசாரியாவிலிருந்து ஆட்சி புரிந்தான். யூதர்களின் முக்கியமான திருவிழாக்களின் போது ஆடம்பரமாகப் படைப்பலத்துடன் ஜெருசலேம் சென்று அந்தோனியா கோட்டையில் தங்கியிருந்து ஒழுங்கையும், அமைதியையும் நிலைநிறுத்துவான்.

ஆளுநனின் முக்கிய பணி வரிசேகரிப்பது. சுங்கவரி வேறு இதர வரிகள் இவ்வளவு என்று நிர்ணயித்து அதை வசூலிக்க ஆயக்காரரை நியமித்தார்கள். நற்செய்தியில் வரும் மத்தேயு ஆயக்காரர்களாவர்.

சமயச் செயல்களில் உரோமையர் யூதர்களுக்கு சலுகை காட்டினர். தமது சமய பழக்க வழக்கங்களைப் புகுத்தாமல் யூதர்களது சமயக் கோட்பாடுகளுக்கும் சடங்குகளுக்கும் மதிப்பு கொடுத்தனர். உருவங்கள் விக்கிரகங்கள் யூதமதத்திற்கு மாறான படியால் ஆலயத்தில் போர்ச்சின்னங்கள், பேரரசனது உருவம் உள்ளசின்னங்கள் காட்டப்படக்கூடாது என்று கட்டளை உண்டு. நாணயத்தில் கூட உருவம் பதிக்கப்படவில்லை. ஆலயத்தில் பலியிட தமது செலவில் தினமும் ஒரு மாடும், இரு ஆடுகளும் பலி செலுத்தக் கொடுத்தனர் ரோமை ஆளுநர்கள். இப்படிப்பட்ட நிலைமையைப் பார்க்கும் போது உரோமையருக்கும் யூதர்களுக்குமிடையே சமாதான நட்புறவு உள்ளது போல் தோன்றுகிறது. ஆனால் உண்மையது வல்ல. ஒருவரை ஒருவர் சந்தேகத்துடன் நோக்கினர், பகையுணர்ச்சியுடன் பார்த்தனர். சில சமயங்களில் ஆளுநர்கள் அதிகாரத்தைத் தவறானமுறையில் அவர்கள் மேல் பயன்படுத்தினர்.

இ. ம. ஜெயசீலன்

## ஆண்டுவிழா...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாவிலை தோரணங்களினால் அலங்கரிக்கப்பட்ட விழா மண்டபத்திற்கு ஆயர் அவர்கள் அழைத்துவரப்பட்டு மண்டப வாயிலில் மலர்மாலை சூட்டி வரவேற்கப்பட்டார்கள்.

பிரதம விருந்தினர், கல்லூரி அதிபர், மன்றக் காப்பாளர், மன்றத்தலைவர், கல்லூரி தமிழாசிரியர் ஆகியோர் குத்து விளக்கேற்ற, இறைவணக்கத்துடன் விழா ஆரம்பமாகியது. மன்றத்தலைவர் அருட்சகோதரன் அன்ரன் ஜோர்ச் அவர்கள்அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார். தொடர்ந்து மன்றக்காப்பாளர் கல்லூரி அதிபர், பிரதம விருந்தினர் ஆகியோரின் உரைகளும் மாணவர்களின்ஒரு சில கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

மன்றத்தின் காப்பாளர் அருட்திரு. கிறிஸ்ரியன் வாஸ் அடிகள் "தமிழைக் கற்போரின் நோக்கங்கள் மூன்று" என்றும், "தனிநாயகம் அடிகள் தமிழ் மொழியின் இனிமை, வளம் இளமை, ஆற்றல், கருத்தாளம் என்பவற்றை உணர்ந்து அவற்றை சுவைப்பதற்காகத் தமிழைக் கற்றார்" என்றும் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் அருட்திரு எஸ். ஜே. இம்மானுவேல் அடிகளார் தமதுரையில் "நாம் போதிக்கும் தேவைக்கு ஒரு காரணியாகப் பயன்படுத்துவதற்கு மட்டும் தமிழ்மொழியைக் கற்கவில்லை, மாறாக, தமிழ் மொழியின் உயிர்க்கூற்றை, பற்றிக்கொள்வதற்காகவே அதனைப் படிக்கின்றோம்" என்று குறிப்பிட்டார். அதனைத்தொடர்ந்து, நடப்பாண்டில் மன்றம் நடத்திய பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை பிரதம விருந்தினர் அவர்கள் வழங்கிக் கெளரவித்தார்கள்.

பிரதம விருந்தினர் தமதுரையில் உலகமெங்கும் தமிழ் மொழியை எடுத்துச்சென்ற தனிநாயகம் அடிகளாரின் மொழிப்பற்று, சேவை என்பவற்றை விளக்கி, அவரின் தமிழ்ப்பணியைப் பற்றி விரிவாக எடுத்துக்கூறினார்.

விழாவைத் தொடர்ந்து வெளியரங்கத்தில், எமது நாட்டில் விசுவாச வித்தை விதைத்து மறைப்பணியாற்றிய புனித பிரான்சிஸ் சவேரியாரினுடையதும், அந்த விசுவாச வித்தை இரத்தம் சிந்தி வளர்த்த தியாகிகளினதும் வீரவரலாறு "வித்துக்கள்" என்னும் நாட்டுக் கூத்து வடிவில் குருமாணவர்களினால் மேடையேற்றப்பட்டது. இந்த நாட்டுக்கூத்தில் வடமோடி, தென்மோடி ஆகிய இரு மரபுகளையும் இணைத்து புதுமையை ஏற்படுத்தியது சிறப்பம்சமாக இருந்தது. இறுதியில் மாணவர் தலைவர் அருட்சகோதரன் அருள்–யாளிஸ் அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவெய்தியது.

க. அருள்நேசன்

# காவலன் கண்மணிகள்

| | |
|---|---|
| ஒளி: 4 | எம் விழிகளின் ஒளி யேசு |
| சுடர்: 17 | எம் வாழ்வின் வழி யேசு |

**விழி வழி:**

### ஒய்வு நேரம் !...ரியூசன் !!

ஓய்வு நேரம் உண்டா ? என்று உங்களிடம் ஒருவர் கேட்டால் உங்கள் பதில் என்னவாக இருக்கும் ?

"ஓய்வு நேரம் எங்களுக்கு எங்கே உண்டு ?

காலையில் பள்ளிக்கூடம் சென்று, மாலையில் வீடு வந்ததும் ரியூசனுக்கு ஓடவேண்டும்; விளையாடக்கூட நேரமில்லை" என்று பலர் கூறியதை நான் கேட்டிருக்கிறேன்.

அன்புக் கண்மணிகாள் ! எதற்காக நீங்கள் ரியூசனுக்குச் செல்கிறீர்கள் ?

உங்களை ரியூசனுக்குப் போகச்சொல்வது யார் ? இலவசக்கல்வி எங்கள் நாட்டின் வரப்பிரசாதம் என்று கூறுவதில் இன்று அர்த்தம் இருக்கிறதா ? ரியூசனுக்குச் செல்வதால் உங்கள் ஓய்வு நேரம், விளையாட்டு நேரம் வீணாகுவதை நீங்கள் உணரவில்லையா ?

பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் கற்பிப்பதில்லை. அதனால் தான் ரியூசனுக்குப் போகிறோம் என்று பலர் கூறுகிறார்கள். இக்கூற்றில் உண்மையிருக்குமாயின் அதனைத் திருத்திக் கொள்ள என்ன செய்ய வேண்டும் ? என்பதைச் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும். வகுப்பாசிரியருடன் உங்களுக்குள்ள புரிந்துணர்வு போல் ரியூசன் ஆசிரியரிடமும் உள்ளதா ?

அன்புக் கண்மணிகாள் !

ஓய்வு நேரத்தை உன் திட்டமிட்ட செயல் முறையால் தேடிக்கொள். அந்த நேரத்தைப் பொன்னாக மதித்துப் பொறுப்பாகச் செலவழிக்கக் கற்றுக்கொள்.

★ தோட்டவேலையில் நாட்டம் கொள்.

★ கை வேலை ஒன்றைக் கற்றுக் கொள்.

★ நல்ல நூல்களை வாசிக்கப் பழகிக்கொள்.

★ காவலன் கண்மணிக்கு ஆக்கங்களை ஆக்க ஆவனசெய்.

குழந்தை யேசு என்னும் உங்களோடு இருந்து உங்களை வழிநடத்துவார்,

அன்பின்
அன்பு விழி

★ நினைவு நாள் நினைப்போம்; செபிப்போம்,
1–6–81 யாழ் பொதுசன நூலகம் எரிக்கப்பட்ட நாள்.
2–6–81 தாவீதடிகள் இறைவனடி சேர்ந்த நாள்.

## என் தாய்

கடவுளின் வார்த்தை
கன்னிமரியிடம் குடிகொள்ள
கடவுளின் மகன்
கருவினில் சுமந்து
கடவுளின் திட்டம் நிறைவேற்ற
கசப்பான சம்பவங்களை எதிர்கொண்டு
தரணி வாழ் மக்களுக்கு
தன் மகனை—சிலுவையில்
தானமாக தந்த– என்தாய்
மழலையிலிருந்து மரண வேளை வரை
மகனைப் பராமரித்த
இவ்விடைக் காலத்தில்
நிகழ்ந்த நிகழ்வுகளை—தன்
நெஞ்சமதில் தாழ்மையுடன் மதித்து
தந்தையின் திட்டமதில்
முழுமை பங்கெடுத்து
ஆண்டவருக்கும்; அடியவருக்கும்
அன்பான தாயாக
ஆண்டவருக்கும் தெரியப்பட்ட தாயே;
என்தாய்—தாயே
நீ வாழி!

வெ. யூஜின்.
A/10.

## ஓவியப்போட்டி இல. 16

"மூவொரு கடவுள்"

இக்காட்சியை 30. C.M. × 25 C.M. ஓவியமாக வரைந்து 30–6–90 ற்கு முன் "பாதுகாவலன்" அ. பெ.இல. 2 யாழ்ப்பாணம், என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் சிந்தனா சக்தியையும், ஓவியத்திறனையும் வெளிப் படுத்தும் விதத்தில் இப்போட்டியில் பங்கு பற்றுங்கள்.

பரிசு ரூபா 25/=

ஓவியப்போட்டி இல. 15 கைவிடப்பட்டுள்ளது. போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.

### 1 ஆம் வருட நினைவு



வஸ்தியாம்பிள்ளை – அல்வின்

தாயின் மடியில்:
**13–7–1920**

தந்தையின் அணைப்பில்:
**6—6—1989**

"வாழ்வு மாறுபடுகிறதேயன்றி அழிக்கப்படுவதில்லை"

அன்பான தந்தையே! உமதுசித்தப்படி இவ்வுலகில் வாழ்ந்து என்றும் உமக்கு நிறைவாய் சாட்சியம் பகர்ந்த வஸ்தியாம்பிள்ளை அல்வின் என்ற உமது அடியானுக்கு வான்வீட்டில் முடிவில்லா பேரின்பவாழ்வு அளித்தருளும். உயிருள்ளவரை எம்மை நேசித்தீர். உதிர்ந்த பின்னும் உம்மை மறவாமல் துயருறும்

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

A/126

### 1 ஆம் வருட நினைவு



திருமதி
அந்தோனிப்பிள்ளை
அருளம்மா

பூமியில் மலர்வு: 16–05–1921
சுவர்க்கம் புகுர்வு: 01–06–1989

பண்பும் பாசமும் பரிவும் காட்டி துன்பம் அனைத்தையும் தனியே சுமந்த எம் அன்புத் தெய்வமே ஆருயிர் தாயே! ஆண்டொன்று கழிந்தாலும் உம் அன்புமுகம் எம் அகக் கண்முன் அனுதினமும் தோன்றுதம்மா. ஆண்டவரின் அருகிருக்க அடியவரும் வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் வாடும்
**கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

A/122

### 5ஆம் ஆண்டு நினைவு



ஞானப்பிரகாசம் அமலதாசன்


பிறப்பு. இறப்பு.
**30–10–1961 06–06–1985**

"உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

அன்பின் நினைவுகளுடன்
**அம்மா, சகோதரங்கள், நண்பர்கள், உறவினர்கள்.**

கரம்பொன் A/127

### விண்ணகநுழைவின் அரை ஆண்டு நினைவு



"உயிர்ப்பும் உயிரும் நானே"

மலர்வு: உதிர்வு:
**24–12–1971 02–01–1990**

**செல்வி. ஜெயந்தி றொபேட்**

இல்லத்தின் ஒளி விளக்காய் அனைவருக்கும் இனியவளாய் ஆண்டு பத்தொன்பது இம்மண்ணில் எம் பாசக் கொழுந்தாய் வாழ்ந்தாயே இன்று பாரெங்கும்தேடி அலைகின்றோமே! கண்ணீர் சொரிகின்றோமே! இறைவா! நீ தந்தாய், நீ எடுத்தாய். உன் நாமம் என்றும் போற்றும் வரத்தை எம் அருமைச் செல்வத்திற்கு அளித்திட உன் பதம் சரணடைகின்றோம்.

இப்பிரிவின் வேதனையின் சுமை தாங்கிய அனைவருக்கும் எம் நன்றிகள்.

**பெற்றார், சகோதரர், உறவினர்.**

பெரிய பண்டிவிரிச்சான்
இல:–61
மடுக்கோவில் A/119

# தமிழுக்கொரு தாவீது....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

முப்பத்திரண்டு மொழிகளில் தேர்ச்சி பெற்ற மூதறிஞர் தாவீதடிகளுக்கு இதைவிட பல மொழிகளில் பரிச்சயமும்இருந்தது. தமிழ்மொழியின் தனிச்சிறப்புக்களை அறிந்து ஆராய்ந்து அனைத்து மொழிகளுக்கும் அடிப்படை மொழி தமிழே என உலகுக்குப் பறைசாற்றினார். அஞ்சா நெஞ்சினனாய் ஒப்பற்ற மேதையாய் உலகுக்குத் தெரிந்த தாவீது அடிகள் தனக்குப் பிழையெனக் கண்டதை தயங்காது கூறும் தகமையுடையவர். தமிழ் அகராதிகளில் மேலானது எனக் கூறப்படும் சென்னை அகராதியிலேயே தனக்குப் பிழையெனக் கண்டவற்றை ஆதாரபூர்வமாக நிரூபித்தவர்.

கல்வித் துறையில் தனக்கொரு இடத்தைப் பிடித்துக் கொண்ட இவர் 1931 ஆம் ஆண்டு துறவியாகி அறிவுச் செல்வத்தை அள்ளி வழங்கும் ஆசானாக யாழ். பத்திரிசியார் கல்லூரிக்கு வந்தார். அங்கு ஒவ்வோர் மாணாக்கரின் மனநிலைகள் புரிந்து கற்பித்தார். ஏழை, பணக்காரன் எனும் வேறுபாடு இன்றி எல்லோரும் எம் தமிழ் மக்கள் என்ற முறையில் கல்வி கற்பித்து வந்தார். எத்தனையோ ஏழை மாணாக்கர்களுக்கு தன்னாலியன்ற பணஉதவி செய்து பெரும் பதவிகளுக்கு உயர்த்தினார். ஏழைகளிலே தான் இறைவனைக் காணலாம் என்ற நோக்கோடு இவரின் பணி வாழ்வு தொடர்ந்தது.

சுவாமி ஞானப்பிரகாசியாரிடம் இவர் சமஸ்கிருதமொழி பயிலச் செல்லும் போதுதான் ஞானப்பிரகாசியாரின் மொழி ஆராட்சிக் கருத்துக்கள் இவரையும் கவர்ந்தன. இதனாலே தான் சுவாமி ஞானப்பிரகாசியார் தொடங்கி வைத்த சொற்பியல் அகராதி ஆக்கும் பணியை இவர் தொடரலானார். இவ்வேளையில் இனப்பிரச்சனையும், மொழிப்பிரச்சனையும் நம் நாட்டினுள் தலை விரித்துத் தாண்டவமாடியது. இதனால் தனது மொழி ஆராய்வைப் பயன்படுத்தி "யாம் அனைவரும்ஓர் இனத்தவரே" என்ற நூலை எழுதி இனங்களுக்கிடையே சமரசத்தை ஏற்படுத்த விரும்பினார்.

இவ்வாறு சமானத்தையும், ஒற்றுமையையும் விரும்பி நின்ற இவரின் மேன்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும் தமிழின் பெருமையை உலகறியச் செய்த அவரின் சிறப்புக்கேற்ப நாமும் வாழ வேண்டும். யாழ். நூலகம் எரிந்த செய்தி கேட்டு நடமாடும் அறிவுக் களஞ்சியமாக விளங்கிய தாவீது அடிகளையும் அதே தீ எரித்தது. இவ் அணையா விளக்கு ஒளிர்விட தமிழ் பெருமைகளைப் பேசுவதுடன் மாத்திரம் நின்று விடாது அவரின் நற்பண்புகளை எம்வாழ்விலும் கடைப் பிடிப்போமாக!

**மேரி றஞ்சிலி மரியாம்பிள்ளை**
தும்பளை

## சமுதாயம்....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்களிடையேமே உண்டு. எனவே மக்களே சாதி, சமய, சீதன இனப்போராட்டங்களை விட்டு விடுங்கள். நீதேடும் சமத்துவம் சமுதாயத்தில் வாழும் ஒவ்வொரு மக்களிடையேமே உண்டு.எனவே மக்களே சாதி, சமய, சீதன இனப்போராட்டங்களைவிட்டு சமுதாயத்திலே சமத்துவத்தை கொணருங்கள். ஒன்றே குலம் ஒருவரே கடவுள். ஒரே தாய் மக்கள் என்ற மனப்பான்மையோடு வாழுங்கள்.

**செ. மேரி அன்ரனிற்ரு லெயா**
டிணற்காடு, உயிலங்குளம்.

### சிதறிய முத்து

★ கிறிஸ்துவை அறிந்து கொள்ளும் அறிவின் பொருட்டு உலகிலுள்ள அனைத்தையும் குப்பையெனக் கருதவேண்டும்.

— **புனித சின்னப்பர்**

### நீங்காத நினைவுகளின் ஓராண்டு நினைவு



கில்பேட் றெசிலின் மாசற்றா (எமிலா)

அன்னையின் மடியில்:
**22–02–62**

ஆண்டவன் அழைப்பில்:
**04–06–89**

"சீவியத்தில் நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்,"

இவரின் பிரிவால் துயருறும்
**பிள்ளைகள், பெற்றோர், சகோதரி குடும்பத்தினர்**

17/5 3ஆம் குறுக்குவீதி,
பாஷையூர், A/121

### 6 ஆம் மாத நினைவு



திரு. யோ. ஆசீர்வாதம்

மண்ணில்: விண்ணில்:
**12–12–1916 05–01–1990**

எமதன்புத் தெய்வமே! எம்மை நீர் பிரிந்து சென்று திங்கள் ஆறு கடந்த போதும் எம் உள்ளத் துயர் மட்டும் கணம் ஆற மறுக்கிறதே!

எம் தந்தைக்காக 05–06–90 செவ்வாயன்று காலை 6—00 மணியளவில் போயிட்டி, புனித லூர்து அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கிறோம்.

தந்தையை இழந்து தவிக்கும்
**மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.**

A/120

### நன்றி நவிலல்

திருக்குடும்ப கன்னியர் ஆங்கிலப் பாடசாலையில் கடமையாற்றிய திருமதி. கிறேஸ் அன்புராஜா அவர்களின் மரணச் சடங்கின்போது சமூகம் அளித்த குருக்கள், கன்னியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் அனைவருக்கும், அனுதாபச் செய்தி, மலர் வளையங்கள் அனுப்பியவர் கட்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

A/128 **திரு. S. அன்புராஜா**
பிள்ளைகள்

### 31-ம் நினைவு நாள்

**மாகிறேற் நல்லையா மரியதாஸ்**

(இளைப்பாறிய ஆசிரியை, யாழ்/திருக்குடும்பக் கன்னியர் மகாவித்தியாலயம்)



அன்னையின்மடியில்
**13–12–1916**

ஆண்டவன் அடியில்
**29–04–1990**

"உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" என்று மொழிந்த இயேசுவே! இவ்வுலக வாழ்வினின்று உம்மிடம் சடுதியாக அழைத்துக்கொண்ட மாகிறேற் நல்லையா மரியதாசின் ஆன்மாவிற்கு நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும். நித்திய ஒளியில் அவர் என்றும் நிலைபெறச் செய்தருளும்.

இவரின் பிரிவால் துயருறும்
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரி, உறவினர்**
குராவத்தை, சுன்னாகம். A/116

பாதுகாவலன்
PATHUKAVALAN

# மக்கள் தொகை கட்டுப்பாட்டில் மதசுதந்திரம் மதிக்கப்படவேண்டும்

**வத்திக்கான், மே. 20**

இயற்கை வளங்களைக் காப்பதற்கான மனிதனின் அர்ப்பணம், ஒழுக்க நீதி தொடர்புடையதாகையால் கடவுளின் திட்டத்தினுள் மனிதனின் பொறுப்புணர்வுகளை வலியுறுத்துவதாக அது உள்ளது என்று 'வெப்பமண்டல காடுகளும், உயிரின வகைகளைப் பாதுகாத்தலும்' என்ற கருத்தரங்கில் பங்கு பெற்றவர்களுக்கு உரை நிகழ்த்தினார் திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர்.

திருப்பீட விஞ்ஞானக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கூட்டத்தில் பங்கு பெற்றவர்களைத் திருப்பீடத்தில் சந்தித்த திருத்தந்தை, தொழில் வளர்ச்சி, வெளிநாட்டுக்கடன், விவசாயம், மேய்ச்சல் நிலம் உருவாக்குதல் போன்றவைகளுக்காக வெப்பமண்டலக் காடுகளும் அதன் மூலம் பல உயிரின வகைகளும் அழிவுக்குள்ளாகி வருவதை சுட்டிக் காட்டினார். மக்கள் தொகைப் பெருக்கமும் இவ்வழிவுகளுக்கு முக்கிய காரணமாக இருப்பதாகப் பலர் கூறுவதை எடுத்துரைத்த அவர், மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுத் திட்டங்களில் குழந்தை பெறுவது குறித்த தம்பதிகளின் மத நம்பிக்கை, மற்றும் ஒழுக்க நெறி சார்ந்த சுதந்திரம் மதிக்கப்படவேண்டும் என்றார்.

இயற்கை வளங்கள் நமது கண் மூடித்தனமான பயன்படுத்தலுக்குக் கொடுக்கபடவில்லை மாறாக, அவை நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும் என மேலும் தன்னுரையில் குறிப்பிட்டார் திருத்தந்தை.

## பாதுகாப்பைதாண்டி திருத்தந்தை சிறைக்கைதிகளைச் சந்தித்தார்

திருத்தந்தை 2–ம் அருள் சின்னப்பர் தனது 47 வது வெளிநாட்டுப் பயணமாக கத்தோலிக்க நாடான மெக்சிக்கோ வந்து சேர்ந்த போது மெக்சிக்கோ ஜனாதிபதி திருத்தந்தையை வரவேற்றார். விமான நிலையத்திலிருந்து மலர்கள், கொடிகள், நல்வாழ்த்து அட்டைகளால் அலங்கரிக்கப்பட்ட பாதைவழியாக மக்கள் கூட்டத்து ஆரவாரத்தோடும் தேசிய நடனங்களுடனும் பேராலயத்தை வந்தடைந்தார். அங்கு குருக்கள், ஆயர்களுடன் இணைந்து திருப்பலி நிறைவேற்றினார்.

மெக்சிக்கோவில் சிறைச்சாலை மைதானத்தில் இறைவழிபாடு நடத்தினார். அதற்கு முன்பாக சிறைக்கைதிகளைப் பார்வையிடுவதற்குத் தடை விதித்திருந்த பாதுகாப்பு வேலிகளைத் தாண்டி சிறைக் கைதிகளை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். திருத்தந்தை பின்னர் சுமார் 1,600 தொழிலதிபர்களையும் சந்தித்துப் பேசினார். மெக்சிக்கோவில் திருத்தந்தையைக் காண வந்த திருப்பயணிகளின் விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் 18 பேர் இறந்தனர். இவர்களில் ஒருவர் கத்தோலிக்க ஆயர்.

## வெளிநாட்டுத் துறவற சபைகள்

**யூக்கன், மே 11**

வெளிநாட்டுத் துறவறசபைகளுக்கு உறுப்பினரைச் சேர்ப்பதில் பிலிப்பைன் ஆயர் சின் சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளார். எந்த துறவற சபையும், அங்கு நிறுவப்பட்ட ஐந்து வருடங்களுக்கு முன் உறுப்பினரைச் சேர்க்கலாகாதென்றும், பேராயரின் அனுமதி பெற்றே ஒரு புதிய சபை தனது இல்லத்தை நிறுவலாமென்றும் அவர் வரையறுத்துள்ளார். பல சபைகள் சேர்வோரின் உளநிலையையோ, பண்பாட்டையோ, முதிர்ச்சியையோ கருதாமல் சபைக்கு ஆட்சேர்ப்பதையே கருதுகின்றன எனவும், வெளிநாடுகளில் அவர்களுக்கு கீழ்த்தரமான வேலைகள் கொடுக்கப்படுவதாகவும் வந்த முறையீடுகளைத் தொடர்ந்தே ஆயர் சின் இப்புதிய விதிகளை ஏற்படுத்தியுள்ளார்.

## சீர்திருத்தத்திற்கு பாராட்டு

**வெரித்தாஸ், மே. 20**

கிழக்கு ஐரோப்பாவிற்குத் தேவையான பொருளாதார, அரசியல், சமூக மாற்றங்களை கொண்டுவந்த சோவியத் ரஷ்யாவின் சீர்திருத்தக் கொள்கைகளை திருத்தந்தை பாராட்டினார். மாற்றம் எதிர் கால வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் தேவையான ஒன்று என்றார். திருத்தந்தை பொதுக் கூட்டத்தில் தன்னுடைய சக மக்களிடம் பேசிய திருத்தந்தை கொர்பச்சேவின் சீர்திருத்தக் கொள்கைகளைப் பாராட்டினார். அவர் மேலும் கூறியதாவது நமது நாட்டிலும், நமது அண்டை நாடுகளிலும் கூட சரியான உறவுகளை வளர்க்க 'கொர்பச்சேவின் சீர்திருத்தக்கொள்கை' போன்ற ஒன்றின் அவசியத்தை தான் முன்பே வலியுறுத்தியதையும் ஞாபகப் படுத்தியது மட்டு மல்ல இவை வெற்றியடைய வேண்டுமெனில் ஆன்மீக மாற்றத்தையும் மக்களூடன் இணைக்க வேண்டும் என்றும் கூறினார்.

## பெண்களுக்கு சேவை விருது

பாகிஸ்தானில் மூன்று கிறிஸ்தவப் பெண்களுக்கு சேவை விருது அளிக்கப்பட்டுள்ளது. இவர்களில் ஒருவர் ஐரிஷ் யூஜீன் கிளாஸ். 1938 முதல் கல்விப்பணியில் ஈடுபட்டுள்ள இவர் பிரதமர் பெனாசிர் பூட்டோவையும் கற்பித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விருதுகள் ஜனாதிபதி இஷாக்கான் அவர்களால் பாகிஸ்தான் தேசிய தினத்தன்று வழங்கப்பட்டன.

## பேரவையின் .....

(1ஆம் பக்கம் தொடர்ச்சி)

தில் வளர்வதற்கு 'பயிற்சி அளிப்பதன் பேரிலேயே கத்தோலிக்க திருச்சபைக்குப் பிரமாணிக்கமாய் இருப்பதன் அவசியத்தையும் வலியுறுத்துவது இவ்வாயர் பேரவைக்கூட்டத்தின் முக்கிய நோக்கம் என்றார். குருமட மாணவர்களுக்கென்று நன்கு பயிற்சி பெற்ற பேராசிரியர்கள் தேவைப்படுகிறார்கள் என்பது 2வது முக்கியத்துவம் பெறுகிறது என்ற பேராயர் கடந்த காலத்தை விட இக்காலத்தில் இத்தேவை அதிகமாக உள்ளது என்றார். வருங்காலத்தில் எத்தன்மையுடைய குருக்கள் தேவைப்படுகிறார்கள் என்ற கேள்விக்கும் பதிலளிக்க இப்பேரவைக் கூட்டத்தில் பங்கு பெறும் ஆயர்கள் முயல்வார்கள் என பேராயர் மேலும் உரைத்தார்.

## முறையீட்டை நீதிமன்றம் நிராகரித்தது

தென் கேரளத்தில் தனியார் பாடசாலைகளில் சமய வழிபாடுகளை நடத்துவதற்குத் தடை விதிக்க வேண்டுமெனக் கோரிய இந்துக்களின் முறையீடு நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டது. அயிரூர் உயர்நிலைப்பள்ளியில் ஞாயிறு பூசைப்பலியும், வழிபாடுகளும் நடத்தப்படுவதை எதிர்த்தே இந்த முறையீடு செய்யப்பட்டது.

## காவல் ...

(1ஆம் பக்கம் தொடர்ச்சி)

துள்ளனர். ஆனால் தாங்கள் விரும்பி நடுநிலையான நடவடிக்கைகள்எடுக்கப்படுவதற்குப் பலரின் மனமாற்றம் தேவை என்று தாங்கள் கருதுவதாக டர்பேன் பேராயர் டெனி தெரிவித்துள்ளார்.

## ஆன்மீக .....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது குழுவாகவோ தங்கள் கிறிஸ்தவ உணர்வுடன் வழிகாட்டப்பட்டு செய்யும் செயல்களுக்கும் ஆன்மீக ரீதியாக மறை தேர்வுடனும் இணைந்து ஆயரின் பேரில் மேற்கொள்ளும், வழிகளுக்கும் தெளிவான வேத நாடுகளைக் காண வேண்டியது அவசியம் என்றார் திருத்தந்தை.

## பொதுநிலையினருக்கான இறையியல் கற்கை நெறி

இவ்வகுப்புகள் 9.6.90 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு பொதுநிலையினர் கழக மண்டபத்தில் ஆரம்பமாகும்.

விண்ணப்பித்திருந்தும் 30–5–90 இல் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற முடியாதிருந்தவர்கள் 7–6–90 வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு மேற்படி மண்டபத்தில் சமூகமளிக்கவும்.

மேலும் புதிதாக சேர விரும்புவோர் விண்ணப்பம், தராதர சமய அறிவுப்பத்திரங்கள், வைப்புப்பணம் ரூபா 100/– என்பவற்றுடன் மேற்குறிப்பிட்டபடி நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிக்கலாம்.

செயலர்.

**யாழ். பொதுநிலைக்கழகம்.**

## 6ஆம் மாத நினைவு

**அந்தோனிப்பிள்ளை பிலிப்**

மண்ணில் துளிர்ப்பு.

**02-01-19J8**

மண்ணில் உதிர்வு.

**03-12-1989**

உன் அன்பில் மகிழ்ந்தோம்
உன் அணைப்பில் வளர்ந்தோம்
உன் உழைப்பில் உயர்ந்தோம்
உன் மூச்சில் கலந்தோம்
முடித்தாய் உன் ஓட்டத்தை
நலமே
முடியைப் பெறச் சென்று
விட்டாய் விரைவே !

இவரின் ஆன்ம சாந்திக்காக கரவை புனித மரியாள் ஆலயத்திலும், கரவை புனித அந்தோனியார் ஆலயத்திலும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப் படும்.

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள.**

மேசி இல்லம்,கரவட்டி. A/129

## சுதந்திரம் .....

(1ஆம் பக்கம் தொடர்ச்சி)

தலத் திருச்சபைகளுக்கு உதவி வந்ததைப் போல், பல காலமாக அரசியல் மற்றும் கலாச்சார அழிவுகளினால் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகியிருக்கும் கிழக்கு ஐரோப்பிய தலத் திருச்சபைகளுக்கு உதவ அனைவரும் முன்வரவேண்டுமென இவ்வாயர் குழுவின் தலைவர் பேராயர் ஜோன்மே உரைத்தார். அமெரிக்க ஐக்கிய நாட்டு ஆயர்களைக் கொண்ட இக்குழு, திருப்பீடம் மேற்கு ஐரோப்பிய தலத்திருச்சபை கத்தோலிக்க புனர்வாழ்வு அமைப்புகள் போன்றவைகளுடன் இணைந்து இத்தகைய பணிகளை மேற்கொள்ளவுள்ளது.

## அறிவித்தல்

எதிர்வரும் ஆனி மாதம் 7 ஆம் திகதி வழமை போல் ஓர் ஒன்றியம் நடைபெறும். அதன் சிறப்பு நிகழ்ச்சியாக கலை கலாச்சாரப் பிரிவுகளுக்கான பிரதிநிதிகள் யாழ். மறைவட்டத்தின் பங்குகளிலிருந்து தெரிவுசெய்யப்படுவர்.

**இயக்குனர்**

யாழ் மறைவட்ட

கலை கலாசாரப் பிரிவு

## மரணஞாபக அறிவித்தல்

**யூன்–2**

**செல்வி. தொபியாஸ் யூட் மறீனா–றாஜி**

3ஆம் ஆண்டு நினைவுத் திருப்பலி

மண்டைதீவு,புனித பேதுருவானவர் ஆலயம்–காலை 6-15 மணி.

A/130

**இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம். புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1990 ஆம் ஆண்டு யூன் மாதம் 1ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.**
இல. QB/1001/58/81

# உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிக்கிறோம் என்கிறார் ஆண்டவர்